Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நாடார் 12-வது மகாநாடு, அருப்புகோட்டை.

## வாலண்டியர் பொதுக்கூட்டம்.

வாலண்டியர் ஜெனரல் கேப்டன்

திருவாளர் ச. சு. பழனிச்சாமி நாடார் அவர்கள் நிகழ்த்திய பிரசங்கம்.

கடவுள் வணக்கம்.

அன்பார்ந்த நண்பர்காள்!

திருவருட்பேறு பெறுவது சிந்தனை சக்தி வாய்ந்த மக்கட் பிறப்பாக நாம் போன்றோர்க்கு உரிய கடமையாகவும் பெரிய வழக்கமாயுமிருக்கிறது. என்? பார்க்க இவ்வுலகிலே காணும் பல்வேறு இயற்கை அமைப்பினை உய்த்துணருந்தோறும், ஆராய்ந்திவாய் இருத்தங்தோறும் இடைத்தற்கரிதாகிய இம் மாணிடர்க்குரிய சக்திக்கும் மீறிய தெய்வசக்தியொன்று மிளிர்வதைக் காண்கின்றோம். ஒளிமிகு அவ்வகை சக்தியைக்கண்டு வியப்படையும் நமக்கு நமது வாழ்க்கைக்கும் நாம் இயற்றும் ஒவ்வொரு காரியத்திற்கும் தெய்வத்துணை மிக மிக அவசியம் வேண்டற்பாலதென்பது இந்த இறுதியாய் உறுதிப்படுகிறதன்றோ? எனவே எங்கும் யாவுமாய் நின்றிலங்கும் சக்தியான அப்பரம் பொருளின் அருட்பார்வை நாம் எடுத்துக்கொண்ட காரியம் அனைத்தும் விக்னமின்றி சம்பூர்ணமாய் வெற்றியுறுபயனளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

### நாடார் மகாஜன சங்கம்.

"நமது நாட்டின்மேல் ஒருவரா இருவரா, பல நாட்டாரின் படையெடுப்பால் அரசாங்கம் மாறி மாறி ஆகுதி வழித்து இந்திய ராஜ்யங்களைச் சீர்குலையச்செய்ததை நாம் அறிவோம். சீர்குலைந்த அந்த ராஜ்யங்களும் ஒன்றையொன்று பாய்ந்து தேய்ந்து போனதையும் அறிவோம். இத்தேய்வு காரணமாக அவ்வவ்விராஜ்யங்களைச் சேர்ந்த மக்களும் நிலைகுலைந்து ஒரு ராஜ்யம் விட்டு மறு ராஜ்யத்திற்கும் ஒரு நாடுவிட்டு மறு நாட்டிற்கும் துரத்தப்பட்டதை, ஒரு காலத்தில் அக்கஷ்டத்தை அனுபவித்த நாம் அறியாமலிருப்பதற்கில்லை. மக்கள் எவ்வகையால் சிதறினும் இந்தியர் அடிமைகளானதற்குக் குறைவில்லை. இதுவரை அடிமைகளாயிருப்பதிலும் குறைவில்லை. நாடார் சமூகத்தினராகிய நாமும் பலமற்றதற்கும் பிரிந்து ஆங்காங்கு சிதறுற்றதற்கும் அரசிழந்து நிலை குலைந்ததற்கும் குறைவில்லை. என்ன கஷ்டமென்று பாருங்கள்! எவ்விதத்தொல்லை என்று உணருங்கள்!! தாங்கமுடியாத கஷ்டத்தை— சகிக்க முடியாத தொல்லையை பிற சமூகத்தாரிடமிருந்து நாடார் சமூகத்தாராகிய நாம் அனுபவித்துவந்தோம் பிரிட்டிஷ் ஆகுதியின் முன்னர்.

உயர்ந்தோர் எப்பவும் உயர்ந்திருக்க முடியுமா? தாழ்ந்தோர் எப்பவும் தாழ்ந்திருக்க முடியுமா? இல்லை; ஒருக்காலுமில்லை. குப்பை உயரும் கோபுரம் தாழுமன்றோ? காலமும் மாறியது. கஷ்டப்பட்டவர்களாகிய நம்மிடத்தே காலச்சக்கிர வேகத்தால் சற்றே உணர்வு தோன்றியது. உயர்வு நிலைத் தாகம் ஏற்பட்டது. பழய உன்னத நமது குல அறிவும், ஆராய்ச்சியும், ஊக்கமும், தர்ம சீலமும் புத்துணர்வு பெற்றன. நல்ல காலம் கிட்டியதெனலாம். க்ஷேம காலம் நெருங்கியதெனலாம். ஆண்டவனருளால் அவதார மூர்த்தியாய் அருங்குணங்களோடு நம்மிடை ஸ்ரீ த. இரத்தினச்சாமி எனும் பெயரோடு பெரியாரொருவர் பொறையாற்றின் கண் தோன்றி ஐக்கியமெனும் கயிறுகொண்டு அன்பெனும் தளைபின்னி பாவிக்கிடந்த நம்மை ஒரு முகப்படுத்தினார். ஒன்று திரட்டினார். ஆங்காங்குள்ள நம்மவர் ஒன்று திரண்டு அவரவர் சுக க்ஷேம லாபங்களை, குறைபாடுகளை அறிந்து நிலை தவழ்ந்த அனைவரும் சீர்திருந்த மார்க்கந்தேடினார். அதாவது நாடார் மக்களின் க்ஷேமங் கருதுதலும் அதற்கான பிரசாரமோ, காரியமோ செய்தலுமே கடமையாகக்கொண்ட "நாடார் மகாஜன சங்க" மெனும் தங்கமாகிய சாதனத்தை நிறுவி அதினின்றும் வருடமொருமுறை மகாநாடு கூட்டுவித்து புகழ்தற்கொண்ணுமார்க்கத்தைக் காட்டினார்கள். நம்மவரை ஒருங்கு கூட்டினார்கள். அவ்வழிபற்றி இதுவரை சமூக நலங்கருதி 11 மகாநாடுகள் வரை வெவ்வேறிடங்களில் கூட்டுவித்து நமது மக்கள் அனுசரிக்க வேண்டிய மார்க்கங்களையும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் எடுத்த வேண்டிய காரியங்களையும்பற்றி தீர்மானித்தும் அதன்படி கூடியமட்டும் காரியபசத்தில் நம்மவர் நடந்துவருவதே போன்று இவ்வாண்டில் 12-வது மகாநாட்டை இக்காரில் கூட்டுவித்து அவசியமான பல விஷயங்கள்பற்றி முடிவு செய்ய விருக்கிறோமென்பதை 12-வது மகாநாட்டின் வேலையில் பொறுப்புடன் பங்கெடுத்துக்கொண்டிருக்கும் வாலண்டியர்களாகிய நாம் அறிந்திருக்கிறோம். அத்தொண்டில் இன்றும் ஈடுபட்டிருக்கிறோம்.

### தொண்டின் அவசியம்.

உலகில் ஒவ்வொரு ஜீவனும் அன்பாயிருக்க வேண்டுமென்றும், தனக்கல்ல, கேவலம் "தான்" என்பவனுக்குமல்ல—பின்னை யாருக்கு? தன்னையல்லாப் பிற ஜீவன்களுக்குப் பரோபகாரமாக இதம் செய்தற்கே இச்சரீரம் பெற்றிருப்பதாக முற்றிலும் கருத வேண்டுமென்றும் உடல் கூற்றை ஆராய்ந்த அனுபவ ஞானிகள் அறைந்திருக்கின்றனர். அவ்விதம் பிறர் அன்பிற்கும் பிரீதிக்கும் பாத்திரமானுற்றான் "தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற்றோன்றாமை நன்று" என்று நாயனார் கூறிய புகழுக்குரியராகலாம். நாமும் இகமுறு பதம்பெறலாம். நாட்டிலுள்ளோரும் நன்மை பெற்று வாழலாம். எனவே இதற்கேது செய்ய வேண்டுமென்பதுபற்றி இனிச்சற்றே ஆராய்வோம்.

ஏதோ பெரிய ஆராய்ச்சியிலிறங்கிவிட்டோமென்று மலைக்கவேண்டாம். மலைபோன்ற காரியமெதுவும் நமது தலைமேல் வந்திறங்கிவிடப்போகிறதோவென்று பீதிகொள்ளவேண்டாம். அவ்விதம் இங்கு மன ஆட்டங்கொள்ளக்கூடிய காரியமாயொன்றுமல்ல. சாதாரணமாக நமக்கும் நமது குடும்பத்திலுள்ள பெற்றோர், உடற்பிறப்பாளர், பெண்டு பிள்ளைகள் ஆகியவர்களுக்கும் உள்ளெழுந்தவாறாக ஓர்வித பிடிப்பு-உறுத்து ஏற்படுவது எதனாலென்று நினைக்கிறீர்கள்? அது அன்பினால். அவ்வன்பின் காரணமென்ன? குடும்பத்தாரின் அனைத்து சுகதுக்கங்களுக்கும், அருகிருந்து கவனித்து அவையனைத்தும் நமக்கு வந்ததாக, நமது தலையில் விடிந்ததாகவெண்ணி அன்பின் வழி ஏற்றுப் பொறுப்பெடுத்துக்கொள்வதைத் தவிர்த்து வேறென்ன சொல்ல வியலும்?

நீர் நிலைக்கொப்பான அத்தகைய நமது அன்பை, குடும்ப அளவிலும் சுற்றத்தாரளவிலும் பிரயோஜனப்படுத்தி நிறுத்தாமல் இடமுள்ளவரையும் செலுத்துங்கள். யாரிடத்தும் எவரிடத்தும் புகுத்துங்கள். குறுகிய திருஷ்டி கூடாது. விரிந்த நோக்கமும் பரந்த கொள்கையும் கொண்டதாகவிருக்க வேண்டும். இது சித்திக்கும் செயலிடலே தொண்டாகும்.

மற்றும், இது மக்களுக்கு வேண்டற்பாலதென்பது அவசியத்திலும் அவசியமே. என்? "அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" எனத் தெய்வத்தன்மை பொருந்திய தாயுமானார் கூறிய மொழிக்கு என்ன சொல்கிறீர்கள்? வீடு என்பதும் மோக்ஷமென்பதும் எங்குளது? அன்பர் தொண்டில்—பணியிலன்றோ விருக்கிறது? அனேக ராஜாக்களை ஜெயித்து அனேக இராஜ்யங்களை அளவேண்டிய சித்தார்த்தர் (புத்தர்) அனேக அரசர்களுடைய இதயங்களை ஜெயித்து அவ்வரசர்களின் உள்ளங்களில் இடம் பெற்று விளங்கினார். எவ்விதமாக இதயங்களை ஜெயித்தார்? படைச் செருக்காலல்ல; சண்டை வெருளியாலல்ல; அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காய் தனது சுகம் பெரிதெனக் கருதாது தொண்டாற்றியதாற்றான்—சேவை சாதித்ததாற்றான். எனவே அன்பை எவரிடத்தும் செலுத்தித் தொண்டு புரிதலிலுள்ள மேன்மையை இயம்பத்தரமன்று. தொண்டின் அருமை குறித்துப் பேசப் பேச மிகப்பெருமைதான். எவ்வளவு தூரமும் விளம்பலாம். ஆனால் மகத்துவமுற்ற இத்தொண்டில் ஈடுபெற்றுத் தொண்டாற்ற முன் வந்திருக்கும் உங்களிடம் இதுபற்றி விரிந்துக்கொண்டு போகவேண்டியதில்லை தான். என்றாலும் இதுபற்றி ஏனைய நண்பர்களிடம் நீங்கள் கூறி அதனால் நன்மை கிடைக்காதாவென்ற அவாவின் மேலீட்டாலும் அவ்விதம் செய்வீர்களென்ற நம்பிக்கையாலுமே சற்று விரிவாகக்கூற நேர்ந்தமைக்கு மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

### தொண்டர்களாகிய நமது கடமை.

தொண்டில் பேரவாக்கொண்டிங்கு குழுமியிருக்கும் தொண்டர்களாகிய நாம், நமது கடமை குறித்துப் பேச வேண்டியது அவசியமல்லவா? நாம் மட்டுமல்ல; மனிதராய்ப் பிறந்தாரனைவரும் தம் தம் கடமையோர்ந்து நடத்தலில் கடத்தாதிருக்க கவனம் வைக்க வேண்டியதே நியதி. எனவே இது சமயம் நமது கடமையாதாகுமெனின் இவ்வூரில் கூடவிருக்கும் 12-வது மகாநாடு சம்பந்தப்பட்டதாயிருப்பது தெரிய வரும்.

நமது கடமை என்னென்பரோ? கூறுதாம். மகாநாடோவெனில் 13 லக்ஷம் ஜனங்களுக்கும் பொதுவாய் அவர்கள் முன்னேற்றத்திற்காய், நன்மைக்காய் அபிவிருத்திக்காய் நடைபெறும் மகத்தான தொண்டாகும். இத்தொண்டிற்குரியவர் நாமே—தொண்டரே. எனவே நமது பெரும் உழைப்பையும் முயற்சியையும் பொறுத்திருக்கிறது கான்பரன்ஸ் நடபடிக்கைகள் என்பது மிகையாகாது. பெருமைக்கேனும் புகழுக்கேனும் விளம்புவதாகக் கருதவேண்டாம். உண்மையில் நமக்குப் பொறுப்பான பல வேலைகள் இருந்தேவருகின்றன. வேலைகள் தானிருக்கின்றன வென்றால் அவைகளை ஒழுங்குபடவும், நேரிய வழியாகவும் முறையாகவும் நிறைவேற்றிவைத்தலில் எடுத்துக்கொள்ளவேண்டிய கவலையும் கவனமும் அதிகம். நாம் நிகழ்த்தற்கான கருமங்கள் யாவன என்பதுபற்றிப் பின்னர் நிர்ணயிக்கப்படலாமென்றாலும் நாமெடுத்தாளும் ஒவ்வொரு காரியத்திலும் நாம் மிகவும் பொறுமை சாதிக்க வேண்டியதுபற்றி இங்கு கூறாது விடுவதற்கில்லை.

தொண்டராய் வரும் நமது கடமையைப் பொதுவாக நுகரின், உடல் வலிமை பெற்றிருக்க வேண்டியதின் அவசியத்தை நான் எவ்வளவு தூரம் வேணுமானாலும் எடுத்தியம்புவேன். உடலின்றி உயிரில்லை. நாம் உயிர் பெற்ற உத்தம புருஷர்களாய், ஆண்மை பொருந்தியவர்களாய், திடசித்தர்களாய், வைராக்கிய சீலர்களாய் திகழ வேண்டுமாயின் உடல்வலி பெற்றிருத்தல் வேண்டும். உடல்வலியின்றேல் எது கரும மியற்றல்கூடும்? எனவே உடல் நலன் பேணுதல் வேண்டும். மற்றும் நமக்கு யாரிடத்தும் பேதமில்லை. அஹிம்சையே நமது பூஷணம். தொண்டே நமது செய் கடமையாம். இதையோர்ந்து வாலிபரொவ்வொருவரும் தொண்டராகலாம். தொண்டராகுங்கள்.

### சமூக ஊழியம்.

சமூக சம்பந்தமாய் நம் பாற்பட்ட கடமையைக் கூறாதுவிடுவேனாயின் அது என் குற்றமாய் முடியும். எனவே நமது சங்கமாகிய "நாடார் மகாஜன சங்கம்" மேற்போட்டிருக்கும் சமூக சீர்திருத்த வழிகளைக் கையாளுவதில் ஈடுபட்டு அதற்கான உதவிபுரிந்து உழைக்க வேண்டியதே சமூக ஊழியமாகும். தலைக்கட்டு வரி வசூலித்தலோ, சங்கங்கள் ஸ்தாபித்தலோ, பிரசார நிமித்தமாகக் கிராமங்களுக்குச் சென்று பிரசங்கம் புரிதலோ, மது விலக்கு, கைத்தொழில் நிர்மாணம், ஆவணி வாரக்கொண்டாட்டம் ஆகியவைகளில் ஈடுபடுதலோ, இன்னோரன்ன ஊழியத்திற்கு அபிமானிகளைச் சங்கம் இன்றும் என்றும் எதிர்பார்த்து நிற்கிறது.

தற்போது சங்கம் வேலை ஒருவாறு தளர்ந்திருக்கிறதாகக் கருதப்படுகிறதின் காரணம் யாதாயிருக்கலாமென்று யோசிக்குமிடத்து, போதிய பிரசாரமின்மைதான் என்று சொல்வதில் குற்றமில்லையென்றே நினைக்கிறேன். பிரசாரமில்லாது என்ன செய்ய முடியும்? நாட்டில் நடைபெறும் எந்த இயக்கத்தை எடுத்துக்கொண்டாலும் அது பலம்பெற்றுப் பெருகுவதற்கு இடைவிடாப் பிரசாரமும், அபிமானிகளின் கைம்மாறு கருதாஉழைப்புமே ஆஸ்தான பீடமாயிருந்துவருகின்றன. சமூகத் தொண்டிற்கு முக்கியமாய் பிரசாரத்திற்கு சம்பளத்தை எதிர்பார்த்து நிற்கும் நபர்களால் எவ்வளவு தூரந்தான் சாதித்துவிடமுடியும்? இவைகளால் பிரயோஜனமில்லை என்று கூறவும் முடியாது. ஆனால் உணர்ச்சியூட்டத்தக்க மாதிரியாக—எழுச்சி பிறப்பிக்கத்தக்கதாக இருக்கவேண்டுமாயின் நம்மில் தொண்டர் கூட்டங்கள் கிளம்ப வேண்டும். இவர்கள் தான் தியாகத்தின் பீடத்தமர்ந்தவராகலாம். உலகம் தியாக மூர்த்திகளையே பெரிதும் மரியாதைக்குட்படுத்தக்கூடும். அவர்கள் வாய்மொழி பற்ற எளிதில் மனமிரங்கவும் கூடும். ஆகவே திறமை வாய்ந்த தியாக மூர்த்தியொருவரின் தலைமையின் கீழ் பல தொண்டர் கூட்டங்களின் வருகையை சமூகம் உள்ளுற வாழ்த்தி இருகரங்களை நீட்டி இனிது வரவேற்கிறது. நன்கு உபசரிக்கிறது.

### முடிவுரை.

தோழர்களே!

இதுகாறும் கூறிவந்தவைகளில் மக்கட்குத் தெய்வத்துணை வேண்டுமென்பதும், நாடார் மகாஜனசங்கம் நமது சமூக முன்னேற்ற பீடமென்பதும், மக்களாய்ப் பிறந்தாரனைவரும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் மக்களின் நன்மைக்காய்த் தொண்டு செய்ய வேண்டுமென்பதும், தொண்டின்றேல் நாட்டில் சுய நலத்தேட்டமே புகுந்து சண்டையும் சச்சரவுமே மேலாடுமென்பதும், தொண்டராய் முன்வரும் அன்பர்கள் விரிந்த நோக்கம் படைத்தவராயிருக்கவேண்டு மென்பதும் சமூக ஊழியத்திற்கு அண்மையில் தொண்டர் கூட்டங்கள் வெளிக்கிளம்ப வேண்டுமென்பதும் தெரியவரும். இதுபற்றி ஆலோசனை புரிந்தும் இங்கு வீற்றிருக்கும் தலைவர்களின் உபதேசங்களையேற்றும் காரியத்தில் செய்து முடிக்கத் துணிவோமாகக் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

இதுசமயம் ஒன்று சொல்லா விடுவதற்கில்லை. தொண்டிற்கு நண்பராய்—கருணாமூர்த்தியாய் விளங்கிவந்த எனது நண்பர்—நமக்கு நண்பர் ஸ்ரீ திருமேனி நாடார்வர்களின் அகால மரணம் நாம் பெரிதும் துயருறத்தக்கதே. அவர்பால் நமக்குள்ள அனுதாபத்தை வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் தொண்டு புரிதலே, சதா தொண்டிலே திகழ்ந்த அன்னார்க்கு மரியாதை செய்வதாகும்.

அன்னவர் இது சமயம் நம் மத்தியில் தொண்டுபுரியும் பாக்கியத்தை நாம் பெறாது போனது விசனிக்கற்பாலதே. எனினும் நம்மத்தியிலே—நம்மிடத்திலே அன்னார் சதா இருப்பதாகவே கருதி, நாம் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு காரியத்தையும் வெற்றியுடன் முடிக்க முன் வருவோமாக.

நிற்க, சமூக ஊழியத்தில் நீங்கள் எவ்வளவுதூரம் ஊக்கம் கொள்கிறீர்களென்பதற்கும்—ஆர்வம் கொள்கிறீர்களென்பதற்கும் அதற்காக இன்றே வேண்டும் பிரயத்தனங்களெடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறீர்களென்பதற்கும் தயார்! தயார்!! என உங்கள் ஒலியிடு ஒருமித்த கரகோஷத்தினிடையே தெய்வத்துணையை மனதில் விருத்தி எனது பிரசங்கத்தை முடிக்கிறேன். பொறுமையுடன் எனது பிரசங்கத்தைக் கேட்டிருந்த உங்கள் அனைவருக்கும் எனது தாழ்மையான வந்தனம். ஜயம்! ஜயம்!!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நாடார் தொண்டர் படை முதலாவது மகா நாடு, அருப்புக்கோட்டை.

## திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களின் அக்கிராசனப் பிரசங்கம்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

6-7-28-ல் காலை 9-மணி சுமாருக்கு நாடார் தொண்டர்படை முதலாவது மகாநாடு நாடார் 12-வது மகாநாடு கூடிய "பாண்டியவிலாஸ்" கொட்டகையில் சுமார் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல்கொண்ட பெரும் திரளான கூட்டத்தோடு கூடிற்று. மகாநாட்டுக்கு திருவாளர்கள், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், பட்டிவீரம்பட்டி சௌந்தரபாண்டிய நாடார், எம்.எல்.ஸி. 12-வது மகாநாட்டு தலைவர். வெ. கனகசபை நாடார், புன்னையப்பநாடார், மதுரை முனிஸிபல் கவுன்சிலர், பெரியதம்பிநாடார், நாடார் மகாஜன சங்கம் காரியதரிசி எம்.எஸ்.பி.செந்திக்குமாரநாடார், பெ. சி. சிதம்பரநாடார், ப. வ. சோமசுந்தரநாடார், கருப்பணசாமிநாடார் நமசிவாயநாடார், அ. கு. சி. த. சிவ. சுப்பிரமணிய முதலியார், ராஜா. இராம சந்திரன் சேர்வை, பி. ஏ. பி. எல்., ஸ்ரீநிவாச நாயுடு, கி. கருப்பையாபிள்ளை, ராமநாதபுரம் ஜில்லா சுயமரியாதை தொண்டர்கள். வேலாயுதம்பிள்ளை, எஸ். கே. இராமசாமி நாடார், வீ. சீதாராம், மதுரை ஜில்லா சுயமரியாதை சங்கம் ஆர்கனைஸர், பா. ம. பாண்டியநாடார், மதுரை, ரத்தினசாமிநாடார், நடராஜன், பட்டிவீரம்பட்டி, ப. உ. ஆ. சிதம்பரநாடார் முதலியவர்களுள்பட பல பிரபல உள்ளூர் வெளியூர் கனவான்கள் வந்திருந்தார்கள். மகாநாடு ஆரம்ப முன் திரு. கருப்பையா பிள்ளையவர்கள் கடவுள்வணக்கம்செலுத்தியபின் திருவாளர் வெ. கனகசபைநாடார் அவர்கள் நாடார்தொண்டர்படை முதலாவது சுயமரியாதை மகாநாடு நடத்த தகுதிவாய்ந்த வள்ளல் பெருமானும் மூட பழக்க வழக்கங்களை அடியோடு ஒழிக்க கங்கணமூர்த்தியாய் விளங்குபவருமான நமதுமாபெரும்தலைவர் திரு. ஈ. வெ. இராமசாமிநாயக்கரவர்கள் அக்கிராசனம் வகிக்குமாறு நான் பிரரேபிக்கிறேன். அதை தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பேசி ஆசனத்தில் அமர்ந்தனர். பின்னர் பெரும் கரகோஷத்தினிடையே திரு. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்கள் பிரரேபணையை முழுமனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் பேசினர்:—

நாம் எந்நிலையிலிருந்து வருகிறோம்? தேசத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் அரசியலின் பெயராலும் எத்தனை அக்கிரமச் செயல்கள் நடைபெற்று வருகின்றன? இவைகளை எதிர்த்துக் காரியம் சாதித்துக்கொள்ள வேண்டுமானால் தொண்டர்படைதான் அத்தியாவசியமாயிருக்கிறது என்பதை நான் சொல்லத் தேவையேயில்லை. நமது தலைவர் திரு. இராமசாமி நாயக்கர் ஒவ்வொரு புரட்டையும் வெள்ளிடைமலைபோல் எடுத்துக் காட்டும் ஒரு மகான். அவர் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பதென்றால் நமது அதிஷ்ட வசமென்றே சொல்ல வேண்டும். ஆகவே இத்தீர்மானத்தை எனது மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்றுபேசிஆசனத்திலமர்ந்தார். பெரும் கரகோஷத்தினிடையேதிரு. வீரமூர்த்தி இராமசாமி நாயக்கர் அக்கிராசனம் வகித்தார். தொண்டர்படை சேனாதிபதி திரு. எஸ். கே. இராமசாமி நாடாரவர்கள் அக்கிராசனரவர்களுக்கு நல்வரவு கூறி நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம்:—சகோதரர்களே! நமது சமூகம் முன்னேற்றமடைவதற்காகவும், சுயமரியாதை பெருகுவதற்காகவும் மிக அவசியமாயிருப்பதால் இந்தத் தொண்டர்படை மகாநாடு கூட்டவேண்டியதாயிற்று. மேல் நாட்டாரை எடுத்துக்கொண்டால் வாலிபர்களின் தொண்டால்தான் பூர்ண விடுதலை பெற்றிருக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலைபோல் தெரிகிறதல்லவா? ஆகவே இந்த மகாநாடானது தியாக உணர்ச்சியின் தொண்டுபுரிவதற்காக மிக துரிதமாக மகாநாடு கூட்டப்பெற்றது. அக்கிராசனரவர்களுக்கு பல அசௌகரியங்களிருந்தும் தலைமை வகிக்கப்பெற்றது நமது அதிஷ்ட வசமென்றே சொல்லவேண்டும். தலைவர்களுடைய பொன்மொழிகளை ஏற்று காரியம் நடாத்திக்காட்டினால் தான் அவருக்கு தக்க ஆதரவை செலுத்தினதாகக் கூற முடியுமென்று பேசி முடித்தார். பெரும் கரகோஷத்தினிடையே அக்கிராசனர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் எழுந்து கம்பீரமாகவும் ஊக்கமாகவும் மக்களின் மனதில் பசுமரத்தாணி போல் பதிய அரியதொரு சொற்பொழிவு சுமார் இரண்டு மணி நேரம்வரை நிகழ்த்தியதன் சாரமாவது—:

சகோதரர்களே! கனவான்களே! தொண்டர்களே! என்னை இம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டபோது நான் ஒப்புக்கொள்ள முடியாதவனாயிருந்தேன். ஆனால் அருப்புக்கோட்டையில் 12-வது மகாநாடு கூடப்போவதால் அனேக பெரியோர்களும் கனவான்களும் வரக்கூடுமாகையால் அவசியம் போக வேண்டுமென்று தீர்மானித்து ஒப்புக்கொண்டேன். நான் முதலில் தெரிவித்துக்கொள்ள வேண்டியதென்னவென்றால் அனேக நண்பர்கள் என் கொள்கைக்கும் எனது தொண்டிற்கும் முரண்பட்டவர்களாய் இம்மகாநாட்டில் கலந்து கொண்டிருப்பார்கள். அவர்களை நான் சொல்லுவதையெல்லாம் ஒப்புக்கொள்ளவோ அதன்படி நடந்துகொள்ளவோ வற்புறுத்தவரவில்லை. எனக்குத் தெரிந்ததை சொல்லுகிறேன். அதை நன்றாய் யோசித்து அது உண்மையானவைகள் என்றும் நாம் முன்னேற்றமடையத்தக்க வழி என்றும் தெரிந்தால் அதன்படி செய்யுங்கள். இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள். நமது நாட்டில் தியாக உணர்ச்சி இல்லாத குறைவினால் மக்களை ஏமாற்ற அரசியல் என்றும் தேசிய மென்றும், காங்கிரஸ் என்றும் புராணமென்றும் சாஸ்திரமென்றும் சைவசமய மென்றும் வைஷ்ணவ சம்பிரதாய மென்றும் ராமாயணம் என்றும் பாகவதம் என்றும் கீதை என்றும் எத்தனையோ புதுமாதிரியாக ஒவ்வொரு இயக்கத்தின் மூலம் மக்களைப் பிரித்து அடிமைப்படு குழியிலாழ்த்தியும், பார்க்கக்கூடாது; சாஸ்திரம் வேதம் படிக்கக்கூடாது; படித்தால் ஈயத்தை காய்ச்சி வாயில் ஊற்றவேணுமென்றும் நாக்கை அறுக்க வேணுமென்றும் பார்ப்பனர்களுடைய சுயநலத்திற்காக எவ்வளவு அக்கிரமமாக விஷயங்கள் எழுதிவைக்கிருக்கிறார்! உதாரணமாக கோவில் விஷயத்தை எடுத்துப் பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. மக்களை இன்னின்ன ஜாதி என்று பிரித்து வைத்து இன்ன ஜாதியார் இன்னின்ன இடத்திலிருக்க வேணுமென்று கடவுளின் பெயரால் நடத்திவருகிறார்கள். இத்தகைய கோவில் கட்டவோ திருவிழா பூஜை முதலியன செய்யவோ நம்முடைய பணம் கோடிக்கணக்காக செலவிட்டு சூத்திரனென்றும் வைப்பாட்டிமகனென்றும் சொல்ல பிரியப்படுகிறோமே யொழிய அதில் ஏதேனும் நன்மை அடைய முடிகிறதா என்று சற்று யோசித்துப் பாருங்கள். உங்களில் கூட இவ்விஷயங்களில் பாட்டன் பூட்டன் நடந்துகொண்ட வழி என்றும் மோக்ஷம் என்றும் புண்ணிய மென்றும் பாப்பானுடைய காலில் விழப் பிரியப்படுகிறவர்களுமிருப்பதாக கேள்விப்படுகிறோம். நீங்கள் கோவிலின் பெயரால் அதிகப் பணம் செலவிடாததினால் தான் உங்களில் நூற்றுக்கு இருபது பேர்களாவது படிக்க முடிந்ததென்றும் மற்றும் வியாபார விஷயத்திலும் முன்னேற்ற மடைய முடிந்திருக்கிறதென்றும் சொல்லவேண்டும். வெள்ளைக்காரர்கள் சாஸ்திர முதலியவைகளைக் கட்டி பரணில் போட்டுவிட்டு அறிவு ஒழுக்கம் முதலிய விஷயத்தில் கவனம் செலுத்தி வருவதினால் தான் அபூர்வமான காரியங்கள் செய்யப்பார்க்கிறோம். அம்மாதிரி நாம் செய்ய முடியாமல்போனது மதம், சாஸ்திரம், புராணம் கோவில் முதலியவற்றிற்கும், சங்கராச்சாரி முதலிய மடாதிபதிகளுக்கும் பிறந்தது முதல் இறந்த பின்னும் மோக்ஷத்தின் பெயரால் லக்ஷக்கணக்கான பணம் விரயம் செய்துவிடுவதினால் நாம் தரித்திர மடைந்து செட்டால் முதலிய இடங்களுக்குச் சென்று இடர்ப்பட்டு நசுக்கப்படுகிறோம். சாஸ்திர மூலமாக சூத்திரர்களுடைய சொத்து பூராவும் பாப்பானுக்கே கொடுக்க வேணுமென்றும் அதுதான் புண்ணியமென்றும் எழுதி வைத்துக் கொண்டு பள்ளிப்பிள்ளைகள் முதல் உபதேசம் செய்துவிட்டு எல்லாவித பலன்களும் பார்ப்பனர்களே அடைவதென்றால் யார்தான் ஒப்புக்கொள்வார்கள்? நமக்கு எதுபாதகமானது; எதனால்மக்கள் முன்னேற்ற மடையவில்லை என்றுசற்றுயோசித்துப்பாருங்கள். நாற்பது வருஷகாலமாக காங்கிரஸ் மூலம் சுயராஜ்யம் சுயராஜ்யமென்று சொல்லி ஒன்றுக்கு இரட்டிப்பாக வரிகள் உயர்ந்ததும் அதில் கொஞ்சம் தொகையில் உத்தியோகம் கொடுத்து விட்டு ஒரு சிலர் நன்மை அடைந்துவிட்டால் சுயராஜ்யம் கிடைத்துவிட்டதாகச் சொல்லமுடியுமா? ஓட்டுக்கொடுங்கள் என்று சொல்லி நம் எதிரிகள் நம்மை மடக்கிவிட பார்க்கிறார்களா? இல்லையா? திருடனை கண்டு நாம் ஜாக்கிரதையாக இருந்தால் திருடன் அத் தொழிலை விட்டு வேறு தொழிலுக்குப் போய் விடுவான். இதனால் நமக்கு என்ன கஷ்ட நஷ்டம் வந்துவிடப் போகிறது? இதை சொன்னால் நாஸ்திகன் என்று சொல்லி ஏமாற்றப் பார்க்கிறார்களே தவிர குறிப்பாக இன்ன விஷயத்தைக் கொண்டு நாஸ்திகன் என்று சொல்ல வருகிறார்களில்லை. நேற்று பிரசங்கத்தில் ஆசார சீர்திருத்தத்தின் பெயரால் திரு. கல்யாணசுந்தர முதலியார் பெரிய புராணம், கம்ப ராமாயணம் முதலிய நூல்களை உண்மைக்கு மாறாக திருத்தி இருக்கிறார்கள் என்றும் சொன்னார். மற்றொரு இடத்தில் முரணாக அது படிக்க வேணும்; குற்றத்தை நீக்கி உண்மையைக் கைக்கொள்ள வேணுமென்று சொல்லுகிறார் எது உண்மை; எது தவறு என்று யார் தீர்மானிக்கிறது என்ற விஷயம் ஒருபுறமிருக்க தவறான விஷயம் என்று ஒப்புக்கொள்ளும் சீர்திருத்தக்காரரும் தவறான உற்சவங்களை நிறுத்தினார்களா என்று பார்த்தால் ஒன்றுமில்லை. இது தவறானது; இது பித்தலாட்டம்; இது மோசக் கருத்துடன் கொள்ளை அடிக்கக் கூடியது என்று உண்மையைத் தெரிந்த சுயமரியாதைக் காரர் இத்தகைய மூட பழக்க வழக்கங்களும் மத சம்பந்தமான சடங்குகள் நிறுத்திவிட்டார்கள். அவர்களுக்கு என்ன குறைவு வந்துவிட்டது? நல்ல நாள் பார்த்து நக்ஷத்திரம், திதி, யோகம், ஜாதக பொருத்தம் மத சம்பிரதாயப்படி மனப்பூர்ண ஆசீர்வாதம் பெற்று நடந்த கல்யாணப் பெண்ணாவது மாப்பிள்ளையாவது அடுத்த வாரத்திலே இறந்துவிடுகிறான். இந்தக் கல்யாணத்தில் தட்டிக்கொண்டுபோன பார்ப்பானிடம் என்னையா இப்படி ஆகிவிட்டது? என்று கேட்டால் அவனுடைய எழுத்து அப்படி இருக்கிறது; நாம் என்ன செய்ய முடியும்? என்று சொல்லுகிறார். இதற்காகபணம்கொட்டுகிறோமே யொழிய வேறு என்ன ரகசியமிருக்கிறது? முக்கியமாக நமக்கு வேண்டியது அறிவு, ஒழுக்கம், சத்தியம், ஜீவகாருண்ணியம் தான். இதற்காக கிராமங்களில் ஏழை குழந்தைகளுக்குநல்ல சாப்பாடு போட்டு இலவசக் கல்வி தர நம் பொறுப்பில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டியது தான் முக்கிய தொண்டாகும். புண்யத்திற்கும் மோட்சத்திற்கும் முக்கிய சாதனமாகவுமிருக்கும். நம் குடும்ப வாழ்க்கையில் பாட்டன் பூட்டன் நடந்து வந்ததென்று சொல்லும் பழக்க வழக்கங்களை பரணில் கட்டிவைத்து விட்டுவிட வேண்டியது. நாம் முன்னேற்றத்திற்கான துறையில் இறங்கி வேலை செய்ய வேண்டும். உங்கள் சமூகத்தில் சுயமரியாதை மணம் வீச வேண்டும். சமயம் வாய்த்த பொழுது தியாகம் செய்யத்தயாராக இருக்க வேண்டும். இத்தகைய உணர்ச்சியுள்ள ஒரு சங்கமிருந்தால் தான் நம் காரியம் சாதித்துக்கொள்ள முடியுமென்றும், நான் பேசியதில் ஏதேனும் தவறுதல் இருந்தால் மன்னிக்க வேண்டுமென்றும், குணத்தைக் கொண்டு நீங்கள் விடா முயற்சியும் தொண்டும் புரிய சர்வ வல்லமையுள்ள கடவுளை பிரார்த்திப்பதாகவும் பேசி ஆசனத்திலமர்ந்தார். பின்னர் அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. நமது சமூக முன்னேற்றத்தைக் கருதி சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத்தக்க முயற்சி செய்ய வேணுமென்று இந்தத் தொண்டர்படை மகாநாடு தீர்மானிக்கிறது என்று திரு. எஸ். கே. இராமசாமி நாடார் அவர்கள் பிரரேபித்து திரு. சொ. ஆ. சொக்கலிங்க நாடார் ஆதரித்து ஏகமனதுடன் தீர்மானம் நிறைவேறிற்று.

2. நமது தாய் சங்கமாகிய நாடார் மகாஜன சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற தீர்மானம் திரு. எ. எஸ். அண்ணாமலை நாடார் பிரரேபித்து கந்தசாமிநாடார் ஆதரித்து ஏகமனதுடன் நிறைவேறிற்று.

3. சமத்துவமில்லாத இந்துமதக் கோவில்களில் கவர்ன்மெண்டார் மானியத்தைக் கொடுக்கக்கூடாதென்ற தீர்மானத்தை திரு. கந்தசாமி நாடார் அவர்கள் பிரரேபித்து சுடலைமுத்து நாடாரவர்கள் ஆதரித்து ஏகமனதுடன் நிறைவேறிற்று.

தலைவர் முடிவுரையில் உங்களது தாய்ச் சங்கத்திற்கு திரு. சௌந்தரபாண்டிய நாடார், திரு பெரியதம்பி நாடார் காரியதரிசிகளாகவும் திரு. கனகசபைநாடார் அவர்கள் தலைவராகவும் அமைக்கப் பெற்றிருப்பதின் விசேஷத்தால் இவ்வாண்டில் சங்கத்தினுடைய காரியங்கள் மிக தீவிரமாக நடாத்திக் காட்டக் கூடிய பெரும் ஊக்கமும் இளமைப் பருவமும் வாய்ந்தவர்களாக இருப்பதோடு இந்தத் தொண்டர்படை கூட்டமும் சேர்ந்து வேலைசெய்ய முன் வந்துவிட்டபடியால் முதல் முதல் பெண் பாடசாலையை ஏற்படுத்தி அது விஷயமாயும் மக்கள் சுயமரியாதையுடன் இருந்துவரும் மார்க்கங்களிலும் தீவிர பிரசாரம் செய்ய ஆரம்பிக்கவேண்டியது உங்களது முக்கிய கடமையாயிருக்கிறது. உங்களை வெகுநேரம் காக்க வைத்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். பின் திரு. எஸ். கே. இராமசாமி நாடாரவர்கள் தலைவருக்கும் விஜயம் செய்திருக்கிற எல்லா கனவான்களுக்கும் இம்மகாநாட்டை நடத்தி வைப்பதற்காக கொட்டகை கொடுத்து சாப்பாடு முதலிய வசதி அளித்து உதவி புரிந்த வரவேற்புக் கமிட்டியாருக்கும் தொண்டர்படையின் சார்பாக வந்தனம் செலுத்தினர். பின்னர் சுமார் 12-30 மணிக்கு கூட்டம் கலைந்தது.

---

**சுயராஜ்ய மேடைக்குச்
சுயமரியாதையே
படிகளாகும்.**

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## முக்கிய குறிப்பு.

சம்மித்திரனைப் பதிப்பித்துவரும் "ஸ்ரீ முத்துமாரியம்மன்" அச்சாபீஸின் வருஷாந்திரக் கணக்கு முடிப்பதாலுண்டாகும் வேலைத் தாமதத்தை முன்னிட்டு அடுத்து 6-8-28-ல் வெளியாக வேண்டிய பத்திரிகைவழக்கம் போல் நிறுத்தப்பட்டு 13-8-28-ல் பத்திரிகை வெளியாகுமாகையால் இவ்வார மித்திரனில் ஓர் அனுபந்தம் வெளியிட்டிருக்கின்றோம்.



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி வருவருவத் தன்மை நாம

மோது மித்தியே பொருட்டு மெவ்விடத்தும் பிரிவு நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ நிலைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமம் பொருளைத் தீருவருளே நினைவாகச் சிந்தை செய்வாம்.

## நாடார்குலமித்திரன்

விபவ வருஷ ஆடி மீ ௰௫ உ

## தொழிலாளர் துயரம்.

நமது பாரத நாட்டில் வெகு காலமாக முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடு இல்லாமலிருந்து வந்தது. ஆனால் பிறப்பினால் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற பாகுபாடு மக்கள் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருந்தது. அதுவும் மகாத்மா காந்தியவர்கள் காட்டிய நல்வழியினாலும், தமிழ் நாட்டில் தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கத்தினாலும் ஜாதி வேற்றுமைகள் ஒழிந்து சகோதரத்வம் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிறது. உயர் ஜாதிப் பித்தர்களும் ஒன்றிரண்டுபடி இறங்கிவிட்டார்கள். இத்தருணத்தில் நமது தொழிலாளர்கட்கு நேர்ந்திருக்கும் துயரத்தை நினைத்து மிகவும் வருந்துகிறோம்.

பம்பாயில் ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து அவஸ்தைப் படுவதும், கல்கத்தாவில் சணல் தொழிலாளர் சங்கடப்படுவதும், தென்னிந்தியாவில் எஸ்.ஐ.ஆர். ரெயில்வேத் தொழிலாளர்கள் ஏங்கும் வேலை நிறுத்தத்தால் கஷ்டப்படுவதையும் நினைத்தால் யார் மனந்தான் வருந்தாமலிருக்க முடியும்? புராதன காலங்களில் சகல தொழில்களும் தத்தம் குடிசைகளிலும், தோட்டங்களிலும் நடந்து இந்தியாவுக்கு வேண்டிய பொருட்கள் மிக மலிவாய்க் கிடைத்திருப்பதுடன், வெளி நாடுகளுக்குத் தாராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அந்தக் காலங்களிலெல்லாம் தொழிலாளர் துயரமடைந்திருப்பதாய்க் காணவில்லை. ஏனென்றால் பெரும்பாலும் குடிசைத் தொழிலாகவே இருந்து வந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் சேர்ந்து ஒரு தொழிலில் அமர்ந்து வேலை செய்திருப்பதாய்க் காணவில்லை. மேல் நாட்டின் சகவாச தோஷத்தினாலே யந்திரப் பிசாசுகள் வந்து இந்தியா வெங்கும் பரவவே மேனாட்டு வழக்கப்படி முதலாளிகள் தொழிலாளிகளைத் துரும்பாக மதிக்கும் சுபாவத்தினாலே தொழிலாளிகளுக்கு வைராக்கியமும், வருத்தமும் ஏற்பட்டு முதலாளிகளை சாத்விகமாக எதிர்த்து வேலை நிறுத்தங்கள் செய்து வருகின்றார்கள். இதில் தென்னிந்திய ரெயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம் தான் மிகவும் பரிதாபமாகவிருக்கிறது. தூத்துக்குடி, தொடைக்கானல் ரோடு, மாயவரம். திருச்சி முதலிய விடங்களில் நடந்த கோர சம்பவங்களைக் கண்ட பொதுஜனங்கள் மிகவும் கலக்கமடைவதாகத் தெரிகிறது. தொழிலாளர்களின் எண்ணங்களும் கோரிக்கைகளும் வெகு ஞாயமாகவே காணப்படுகின்றன. சில இடங்களில் நடந்த சம்பவங்களை முன்னிட்டு தொழிலாளர் மீது முழுப்பிசகையும் சுமத்திவிடுவது அறிவுடைமையாகாது. ஒரு இயக்கம் எவ்வளவு சாத்விகமான முறையில் அமைத்திருந்தாலும் ஒரு சில அவசரக்காரர்களும் இருக்கத்தான் கூடும். அதற்கு நேர் விரோதமான விஷமிகள் வெளியிலிருந்து கொண்டோ ரகசியத்தில் உள்ளே நுழைந்துகொண்டோ விஷமத்தை விளைவிப்பதும் சகசம். இத்தியாதி சம்பவங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, மற்றெல்லாவிடங்களிலும் நடப்பதைக் கண்டுங் கேட்டுமிருக்கின்றோம். ஏழைத் தொழிலாளிகள் வயிற்றுக்குப் போதவில்லை என்று கேட்டால் முதலாளிகள் அதற்குச் சரியான பரிகாரம் தேட வேண்டிய கடமையை விட்டு அவர்களை எதிரிகளாகப் பாவித்து பிடிவாதங்காட்டுவது அறிவுடைமையாகாது.

இப்போது தென்னிந்தியரெயில்வே ஏஜண்டு சிறிதும் இரக்கமின்றி பிடிவாதங்காட்டுவதும், அதிகாரிகள் நடு நிலைமை தவறி துப்பாக்கியாற்சுடுவதும், தொழிலாளர்கட்கு அனுதாபப்படும் தலைவர்களுக்கு வாய்ப்பூட்டுப் போடுவதும் மிகவும் அநியாயமாகும். இந்தியாவில் கழுதைப் பொதி, குதிரைப் பொதி, மாட்டுப் பொதி, கட்டை வண்டி யேற்றங்கள் குறைந்து, கால்நடை மெலிந்து, நால் பலங்குறைந்து விட்டோரமெல்லாம் மோட்டார் வந்து குவிந்தும், ஆகாயத்திலும் பறக்க அண்ணாந்து பார்த்தும், ரெயிலே நமது உயிர் என்று நம்பியும் இருக்கும்போது ரெயிலே நிறுத்தப்பட்டுப்போனால் பொதுஜனங்கள் உயிர் வாழ்வதே கஷ்டமாக முடியும். உணவுப் பொருள்கள் வாராமற்போனாலும் அல்லது சமயம் பார்த்து அதிக லாபம் வைத்து உணவுப் பொருட்கள் கிராக்கியாக விற்கப்பட்டாலும் பொதுஜனங்களுக்கு ஆத்திரமேற்பட்டு சமாதானக் குலைவுண்டாகக்கூடும். தொழிலாளர் துயரத்துடன் பசியாளர் துயரமும் சேர்ந்து கொண்டால் முதலாளிகளுக்கும் அதிகாரிகளுக்கும் கஷ்டமாக விருக்கும். அவ்வாறு நேர்ந்துவிடாமல் கவர்ன்மெண்டார் மத்தியஸ்தமாயிருந்து இச்சிக்கலான பிரசினையை கால தாமதப்படுத்தாமல் தீர்த்து வைக்க வேண்டுகின்றோம். ரெயில்வே ஏஜண்டும் பிடிவாதங் காட்டாமல் இறங்கிவிட வேண்டும்.

தேச சீர்திருத்தத்திற்கு மூல புருஷர்கள் நாங்கள் தானென்று மார் தட்டும் காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர் துயரங்களை அதிகமாய்க் கவனித்ததாகத் தெரியவில்லை. தொழில் வேலை நிறுத்தம் செய்வது அதிகப் பிரசங்கித்தனமென்றும், அதில் வெற்றி ஏற்படாதென்றும், பொதுஜன சாவதானத்துக்கு விரோதமென்றும் வீடெரியும் போது வீணை வாசித்துக்கொண்டிருந்தவனைப் போல் அவரவர் வீடுகளிலிருந்து மேற்கண்ட பல்லவிகளைப் பாடிக்கொண்டிருப்பது ஞாயமாகத் தோன்றவில்லை. இவ்வேலை நிறுத்தக்காரர்களுக்கு சில ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும், சுயமரியாதை வீரர்களும் அதிக அனுதாபங்காட்டுகிறார்களென்ற காரணத்தைக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் ஒதுங்கி நிற்பார்களானால், ஞாயத்துக்கும் தருமத்திற்கும் பொருத்தமாயிராது. சென்னையில் சட்டசபைகளின் தேர்தல்கள் காலத்தில் நாங்கள் தான் தொழிலாளிகளின் அனுதாபிகளென்று தாங்களே விளம்பரம் செய்துகொண்ட தலைவர்களெல்லாம் என் தலை மறைந்திருக்கவேண்டும்? இதை பிராமணரல்லாதார் பிரச்சினையென்றாவது அல்லது அராசகப் பிரசினையென்றாவது நினைத்து யாரும் இதற்கு உதவிசெய்யாமல் ஒதுங்குவார்களானால் படு மோசமும் பயங்கொள்ளித்தனமு மாகுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆற்று வெள்ளம் ஐயர் வீடென்றாவது ஆசாரி வீடென்றாவது பார்க்காதென்று யாவரும் அவசரமாய் அணைப்போட முயற்சிப்பது போல் தொழிலாளர் துயரத்தை யாவருங்கருதவேண்டும். சாதாரண ஜனங்களுக்குள்ளே இவ்வாறு ஒற்றுமையும் கட்டுப்பாடுகளும் ஏற்படுவதானது, எதிர் காலத்தில் ஒரு சமயம் இந்தியா வெங்கும் ஒன்று சேர்ந்து இந்தியாவின் பிறப்புரிமையைப் பெறுவதற்கு ஒரு படிப்பினையாகுமென்பதாக எண்ணி எல்லோரும் கட்சி வேற்றுமை காட்டாமல் உதவி செய்வார்களாக.

பன்னாட்களாகத் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர்கள் தங்கள் குறைபாடுகளை ரயில்வே அதிகாரிகளுக்கு எடுத்தோதிவந்தும் ஒன்றும் பயனில்லாது போனது கண்டு கடைசிமுறையாகக் கொண்ட சாத்வீகப் போராட்டமாய் வேலைநிறுத்தம் செய்யவேண்டுமென முடிவுகொண்டு அதற்கான திட்டங்களுடன் பிரசாரம் செய்து வெற்றி மணத்தோடு 19-7-28 முதல் வேலை நிறுத்தம் ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் குறைபாடெல்லாம் வயிற்றுக் குறைபாடுதான். சம்பளம் போதவில்லை; ஓயாது வேலை செய்தும் வயிறார உண்ட பாடில்லையே யெனப் பரிதபித்துக் கேட்கும் போது செல்வங் கொழுத்த முதலாளிகள் அவர்கள் இரங்கலுக் கிரங்கி அவர்கள் குறைகளைய முற்படுவதே தர்மச் செய்கையும், தமக்கொரு லாபகாரியமு மாகுமே யொழிய, அதை விடுத்து பராமுகங்காட்டி கௌரவமுகத்தோடு புண்ணிற் பெரும் புளைபுகுத்துவதுபோல் மென்மேலும் அவர்கள் அலற அலற அவர்களை வேலையிலிருந்து நீக்கவும், வேலைநேரத்தையுயர்த்தவுமான கொடுமைகளைப் புரியலுமாயிருந்தால் முதலாளி தொழிலாளிகளுக்குள்ளுள்ள பிடிப்புத்தான் என்னவாகும்? ஏழைத்தொழிலாளிகள் என் செய்வர்? பகவானே! யென்று ஓலமிட்டழுவர். இக்கண்ணீர் முதலாளிமார்களைச்சும்மா விடுமா? விடாது விடாது. காருண்யக் கடவுளன்றோ நியாயம் வழங்குபவர்? அது ஒருபுற மிருக்கட்டும்.

முதலாளிகள் சார்பாகப் பேசப் புகும்போது சிக்கனமுறை கையாடுவதாகக் கிளத்தலாம். அப்படி ஏதேனும் பெரிய நஷ்ட முண்டாகவு மில்லையே. வேலையும் அதிகம் வேண்டும்; கூலியும்குறைவாய்க்கொடுக்க வேண்டுமென்று நியாயத்திற்குப் புறம்பாய் நடந்து கொள்வது பாவமேயாகும். தொழிலாளிகள் உற்சாகத்துடன் வேலை செய்தாலன்றோ அங்கு பயன்கிடைக்க ஏதுவிருக்கின்றது? அவர்கள் அடி வயிற்றிலடித்து விட்டால் அவர்கள் பாவமும், சாபமும் முதலாளிகளை எவ்வகைத்தும் பீடித்து விடும் என்பது திண்ணம் திண்ணம். எந்த அறிவுடைய முதலாளியும் தொழிலாளியின் க்ஷேமத்தில் குறுக்கிட நினையான். அது அவனின் காரியக் கேடுக்கு இலக்காகும் என்பது ஊதியம் தேடு முறையில் அறிய வேண்டிய முக்கியமான தொன்று.

இதுவும் தவிர்த்து தற்கால நிலைமையில் இருக்கும் போக்குவரத்து சாதனத்திற்குத் தற்போதிய வேலை நிறுத்தம் பொதுஜனங்களைப் பெரிதும் பாதித்திருக்கிறது. பிரயாணச் சங்கடமும் வியாபாரப் போக்கு வரவின்மையும் ஏற்பட்டு ஜனங்கள் தவிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இந்நிலைமை நீடித்துவிட்டால் ஜனங்கள் பெரிய பெரிய கஷ்டங்களெல்லாம் அனுபவிக்கவேண்டிவரும். அவ்வளவு தூரம் பாதகம் ஏற்படாவண்ணம் கவர்ன்மெண்டார் கவனிக்கக் கடமைப் பட்டுளார்கள். வெள்ளம் வரு முன்னே அணைபோடுதலே மதி விளக்கும். முற்ற விட்டுவிட்டுப் பின் பார்ப்பதென்றால் பாதகங்கள் பல நிகழ்ந்துவிடும். எனவே அரசாங்கத்தார் இது போதே தலையிட்டு ஒரு முடிவு ஏற்படுத்தப் பிரயாசை யெடுத்துக் கொள்வார்களாக.

அரசாங்கத்தார் தலையிடுவதில் நியாயம் காண்பதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பாதக சாதகம் பார்க்க வேண்டும். ஒரு சிலர் சிபாரிசுக்காகவோ, அல்லது தம் நலங்கருதியோ நியாயந் தவறிவிடக் கூடாது. நியாயம் எங்கிருக்கிறதெனின், தொழிலாளர் பக்கமே எனக் கூசாமல் கூறுவோம். ஏழைகள் குறை தீர்ப்பதே காருண்யக் கவர்ன்மெண்டாரின் செங்கோல் முறையாகும். ஆனால் அதிகார தோரணையில் பல மற்ற ஏழைத்தொழிலாளிகளை அடக்கிவிட முயல்வது நீதியாகாது. புளிச்ச எப்பமிட்டுக் கொண்டிருக்கும் முதலாளிகளோடு பசியேப்பமுடன் வயிற்றுக்காக வாதாடும் தொழிலாளிகளிடம் கவர்ன்மெண்டார் கருணைகாட்டவேண்டும். ஏழைகள் திருப்தி கொள்ளுமாறு சமரசம் பண்ணிவைப்பதே சாலச் சிறந்ததாகும்.

## குறிப்பு.

### சங்க வாரம்.

வருகிற ஆவணி மீ முதல் வாரம் நமது மகாஜன சங்க வாரமாகும் என்பதை நம் மகாஜனங்கள் அறிவார்கள். அவ்வாரம் ஏழு நாட்களையும் மகாஜன சங்க வாரமாக வழக்கம்போல் கொண்டாடுவதற்கு மகாஜன சங்கத்தினின்றும் அறிக்கை பிறப்பிக்கப்படும். அவ்வறிக்கை கண்டு நம் மகாஜனங்களனைவரும் அந்நாட்களை நம் நன்னாட்களாகக் கொண்டாடி மகாஜன சங்கத்திற்கு நன்கொடை, சந்தா, தலைக்கட்டு வரி முதலிய பண வசூல் செய்து அனுப்பவும், நம் ஜன சமூக நன்மையையும், நாட்டின் க்ஷேமத்தையும் கோரி அவரவர்ம் தாச்சாரப்படி ஆண்டவனைநினைத்து பக்திமார்க்கப் பஜனைகள் நடத்தவும், முந்திய வருஷங்களில் அனேகர் உபவாசமிருந்து பிரார்த்தனை நடத்தியதே போல் நடத்தவும் கேட்டுக்கொள்கிறோம். சங்க வாரப் பாட்டுகளடங்கிய புஸ்தகம் நம் மித்திரன் ஆபீஸில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# தென் இந்திய ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

## வேலைநிறுத்தம் எங்கும் வியாபித்திருக்கிறது.

## துப்பாக்கிப் பிரயோகம்.

## லைன்களில் சத்தியாக்கிரகம்.

## போட் மெயிலுக்கு வந்த ஆபத்து.

## வண்டிகள் படும் பாடு.

### தலைவர்கள் கைதியாதலும் 144-ன் பிரயோகமும்.

ஆனல் இப்போது அரசாங்கத்தார் தலையிட்டுச் செய்யும் செய்கையானது தொழிலாளர்களுக்குப் பாதகம் விளைக்க முற்பட்டிருப்பதாகவே தெரிகிறது. அவர்களின் தலைவர்களைக் கைதியாக்குதலும், 144—வது செக்ஷன் பிரயோகிப்பதும், கூட்டங்களைக் கலைப்பதும், கலைப்பதில் முரட்டுத்தனமாய் உதைப்பதும், துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுமாயிருக்கிறார்கள். என்னே இவர்கள் தொழிலாளர்கட்குக் காட்டும் கடூரமுகம்! குழப்பத்தை யொடுக்கும் முறையில் இவ்விதம் செய்வதாகச் சமாதானம் கூறலாம். குழப்பக்காரர்கள் தொழிலாளிகளாகார். அவர்களை முன்னிட்டு காலிகள் வேண்டியவேலைகள் செய்வார்கள். வண்டிகளைக் கவிழ்ப்பதும், கல்லாலெறிவதும் தொழிலாளிகள் தான் என்று பழி சுமத்தி விடக் கூடாது. செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டியது தான். அவர்களுக்குத் துப்பாக்கி உபயோகிக்க வேண்டியது தான். ஆனல் சாத்வீகக் குணத்தோடு சத்தியாக்கிரகமே சதமென்றிருப்போர்களையும் இவ்விதக் கொடுமைக்காளாக்குவது தான் நியாயமற்ற செய்கையாகும். தொழிலாளர்களே குழப்பஞ் செய்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். குழப்பத்திற்குக் காரணமென்ன? நியாயத்திற்குப் போராடுகிறார்களா? அன்றி அநியாயமாகவா? நியாயம் என்று தோன்றும் போது ரயில் அதிகாரிகளுக்கேன் உதவியாக நின்று தொழிலாளர்களை மடக்கவேண்டும்? வண்டிகளை ஓடச் செய்யவேண்டுமென முதலாளிமார்கள் பிரயாசை கொள்ளத்தானே தொழிலாளிகள் பலாத்காரம் பண்ணும்படியாகிறது. எனவே ஓர் சமரச முடிவேற்படும் வரை வண்டி போட்டத்தைக் கவர்ன்மெண்டார் நிறுத்தி வைக்கக் கூடாதா? பொது ஜனங்களுக்குப் பாதகம் ஏற்படுமே வண்டிகளை நிறுத்தினல் என்று தோன்றுமேல் இப்போதுள்ள நிலைமைக்கும் மேலாகி விடுமோ? எனக் கேட்கிறோம். உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் இப்போதேற்படுவது போல் ஏற்பட்டுவிடாது. சமரசமும் விரைவில் முடியும். ஏழைத்தொழிலாளிகள் கவலையும் தீரும். ஆகையால் காருண்ய கவர்ன்மெண்டார் கையாளும் தற்போதிய செய்கைக்கு மாற்றந் தேடி ஒரு உசித வழிக்கு வருவார்களாகவும்.

தொழிலாளிகள் விஷயத்தில் ஏனையவர்கள் அனைவரும் அனுதாபங்காட்டவேண்டும். அவர்கள் பெண்டுபிள்ளைகளின் ஓலத்தைக் கண்டவர்கள் மனம் கல்லேனும் கரைந்து விடுமென்பது உறுதி. உபகாரம்புரிபவர் இருப்பதோடு உபத்திரவம் பரிபவரும் சிலர் தோன்றி யிருக்கிறார்களெனத் தெரிகிறது. அவர்கள் தொழிலாளர்கள் பெயரால் அக்கிரமங்கள் புரிவதும், பின் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுப்பதும், இயக்கத்தைக் குறைகூறுவதுமா யிருக்கிறார்கள். இவர்களை உபகாரம் புரியாவிட்டாலும் உபத்திரவம் புரியாமலிருக்குமாறு வேண்டுகிறோம்.

தொழிலாளர்களுக்கும் இறுதியாக ஒருவார்த்தை. அவர்கள் என்ன இடுக்கண் விளையினும் சலியாது ஊக்கமுடன் கடைசிவரை சாதிக்கவேண்டும். பலாத்கார முறையில் இறங்க மனம் கொள்ளவேண்டாம். மகாத்மாகாந்தியடிகள் தியானத்துடன் சாத்வீகத்தையே கைக் கொள்ளவேண்டும். இவையெல்லாம் அவர்களுக்குத் தெரிந்த விடயங்களேயெனினும் வீண்பழி சுமத்தப்படுவதால் எச்சரித்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. அவர்



ஸ்ரீமான் மா. வே. மா. மாணிக்கவேல் நாடாரவர்கள்,
உபசரணைக்கமிட்டிச் சேர்மன்,
வாலிப நாடார் 2-வது மகாநாடு,
அருப்புக்கோட்டை.

களுக்குக்ஷேமகாலம்சீக்கிரம்கிட்டும் என்பது நிச்சயம். ஆண்டவன் அருள்பாலிப்பான். பல்வேறு இடங்களில் சத்தியாக்கிரகமும், துப்பாக்கிப் பிரயோகமும், பெருத்த அமளியும் நடந்துவருகின்றன. அவற்றில் சில இங்கு தருகின்றோம்.

### மாயவரம்.

ரயில்வே தொழிலாளர்களும், அவர்களிடம் அனுதாபங்காட்டுபவர்களுமாக சுமார் 5000 பேர் லைனில் உட்கார்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்கிறார்கள். வருகிற வண்டிகளெல்லாம் அவ்விடம் நின்றுவிடுகின்றன. அவர்கள் கஷ்டத்தின் மேல் கலைக்கப்பெற்ற பின்னர் வண்டிகள் நகருகின்றன. சுமார் 200 போலீசார் துப்பாக்கி சகிதம் வண்டிகளையும் ஸ்டேஷனையும் காத்துவருகின்றனர். அங்கு பெருத்த குழப்பமேற்பட்டு கூட்டத்தினர் கற்களால் அடித்ததால் போலீசார் கூட்டத்தைக் கலைப்பதற்குத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். கல்லெறியால் போலீஸாரில் 9 பேருக்குப்பலத்த காயமேற்பட்டிருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தால் 5 தொழிலாளிகள் இறந்துவிட்டனர்.

### திருச்சிளுப்பள்ளி.

திருச்சி கோட்டைக்கும் ஜங்ஷனுக்கும் இடையே தண்டவாளங்களின் சாவிகளை அப்புறப்படுத்திவிட்டதால் தண்டவாளம் ஆபத்திலிருக்கின்றது. அதைப் பழுது பார்க்கின்றனர். ரயில்வே ஸ்டேஷனிலும் லைன் நெடுகிலும் போலீஸ் காவல் வைக்கப்பட்டிருக்கிறது. வேடிக்கைபார்க்க ஏராளமான ஜனங்கள் நடக்கின்றனர். பிளாட்பாரத்தில் யாரையும் விடுவதில்லை. ரயில்வேஏஜெண்டு ரோத்கிராவும், மற்ற ரெயில்வே அதிகாரிகளும் அடிக்கடி ஸ்டேஷனைப் பார்வையிட்டுப் போகின்றனர். போலீஸ் உயர் அதிகாரிகளுமிருக்கின்றனர்.

### சென்னை.

சென்னை எழும்பூர் ஸ்டேஷனில் சில தொழிலாளர் வேலைபார்த்துக் கொண்டிருக்கும் போது வேலை நிறுத்தக் காரர்கள் வேலை செய்ய வேண்டாமென நியாயம் கூறிக் கொண்டிருக்கும்போது அவர்களைப் போலீசார் கைதியாக்கினர். இதையறிந்த எழும்பூர் ஏரியில் கூடியிருந்த தொழிலாளர்கள் தம்மையும் கைதியாக்கிக் கொள்ளும்படி தெரிவிக்க அவர்களைத் துப்பாக்கிகொண்டு அடித்துத் துரத்தினர்.

### விக்கிரபாண்டி.

விழுப்புரத்திற்கு வடக்கே விக்கிரபாண்டியில் "திருவனந்தபுரம் எக்ஸ்பிர"ஸை தடுத்துச் சத்தியாக்கிரகம் செய்யும் போது குழப்பமேற்பட்டதில் போலீஸார் 22 பேர்களை பயனட்களால் குத்திக் காயப்படுத்திக் கைதியாக்கினர்.

### நாகபட்டணம்.

பெண்டிரும் குழந்தைகளுமாக 1000 வரை லைனில் படுத்தும் உட்கார்ந்தும் கொண்டார்கள். வண்டி போக முடியாத நிலைமையேற்படவே ஸ்தல அதிகாரிகள் தந்திரமாய் கலைந்து போகும்படி செய்கின்றனர். முடியவில்லை. லைனில்குடிசைகள்கட்டிசமையல்செய்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### தூத்துக்குடி.

தூத்துக்குடியில் மேலூர் ஸ்டேஷனில் ஜனங்கள் திரளாகக்கூடி கல்லெறிந்து ஸ்டேஷன் கட்டடத்தை சேதப்படுத்திவிடவே போலீஸார் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தார். ஒருவர் இறந்தும் பலர் காயப் பட்டும் போயினர்.

### திருநெல்வேலி.

ஸ்டேஷன் கட்டடத்தில் கல் மாரி பொழிந்து ஜன்னல்களும் கண்ணாடிகளும் நொறுங்கின.

### போட் மெயிலுக்கு ஆபத்து.

தனுஷ்கோடியிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த போட் மெயில் காட்டுப் பாக்கத்திற்கும் சிங்கப்பெருமான் கோவிலுக்குமிடையில் வரும் போது தண்டவாளம் கழற்றப்பட்டிருந்த காரணத்தால் கீழே யிறங்கி சாய்ந்து விட்டது. அதில் 2 மூன்றும் வகுப்பு வண்டிகள் நொறுங்கிவிட்டன. வண்டியில் சொற்ப பேர்கள் தானிருந்தார்களாகையால் அதிகச் சேதமில்லை. 20 பேர்களுக்குக் காய மேற்பட்டிருக்கிறது.

### வண்டிகள் படும்பாடு.

அனேகமாய் ஸ்டேஷன்களில் வண்டிகள் கல்லெறி வாங்காமல் போவதில்லை. அதற்குத் தப்பினலும் தண்டவாளம் விட்டிறங்கிவிடுமோ என்ற பயத்திற்குத் தப்பமுடியாதிருக்கிறது. போட் மெயிலைப்போல கொடைக்கானல் ரோடிலும், தூத்துக்குடியிலுமாக இரு பாஸஞ்சர்கள் கவிழ்க்கப்பட்டன. வண்டிகளும் இஞ்சின்களும் நொறுங்கி அதிக ஜனச் சேதமும் ஏற்பட்டிருக்கின்றது.

### தலைவர்கள் கைதியாதல்.

தொழிலாளர் தலைவர்களாய திருவாளர்கள் முகுந்தலால் சர்க்காரையும், கிருஷ்ணசாமிபிள்ளையையும், மாணிக்கதாஸையும் கைதி செய்திருக்கின்றனர். இன்னும் பல தலைவர்கள் கைதியாக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 144.

சென்னையில் ரெயில்வே தொழிலாளர் இயக்கத்திற்கு 144 பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அவ்வியக்கத்திற்கு எவ்வகையிலும் அனுதாபங் காட்டக் கூடாதாம். இப்போது திருவாளர்கள் கண்ணப்பர், தண்டபாணிபிள்ளை, கலியாணசுந்தரமுதலியார் ஆகியவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, செங்கல்பட்டு ஜில்லா இன்னும் பல விடங்களிலும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

### தொழிலாளிகளின் கடைசி வேண்டுகோள்.

(1) கதவடைப்பு செய்த காலத்திற்குக்கூலிகொடுக்கவேண்டும். (2) ராஜிநாமாச் செய்தவர்களைத்தவிர மற்றவர்களை வேலைக்குவைத்துக்கொள்ள வேண்டும். (3)கீழ்தர வேலையாட்களுக்குச் சம்பளம் கூட்டவேண்டும். (4) ரன்னிங்ஸ்டாப் என்னும் ரயில் போக்கு வரத்தில் சேர்ந்த ஆட்களின் குறைகளை நீக்க வேண்டும்.

### காட்டிக்கொடுப்பவருக்கு வெகுமதி.

நிரந்தரவழிகளைச் சேதப்படுத்தி வண்டிகளைக் கவிழ்த்துவிட்டவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு ரூ 10.000-0-0-ம், இன்னும் ரயில்வே ஆக்டின் 101, 126, 129—வது செக்ஷன் படி குற்றம் புரிபவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு ரூ 500-0-0-ம் வெகுமதி கொடுப்பதாக ரெயில்வே ஏஜெண்டு விளம்பரப்படுத்தியிருக்கிறார்.

### நிலைமை.

நிலைமை தளர்ச்சியடையவில்லை. அயர்வின்றி பரபரப்புடனேயே காரியங்கள் நடைபெறுகின்றன. ஒரோவிடங்களில் சிற் சிலர் வேலைக்குத் திரும்புகிறார்களெனத் தெரியவருகிறது. இச்சிறு தொகையினரால் இப்பெரு வியக்கம் வலுக்குறையும் என்பதில்லை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நாடார் 12-வது மகாநாடு.

### மூன்றாம் நாள் நிறைவேறிய தீர்மானங்கள்.

மேற்படி மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டன:—

1. நாடார் ஜன சமூகத்தின் திலகம் போல் விளங்கியவரும் தலைவரும் மிகவும் தியாக சித்தையுடைய வருமான ஸ்ரீமான் டி. பி. திருமேனிநாடார் அகால மரணமடைந்ததைக் குறித்து இம்மகாநாடு மிகவும் அனுதாபப்படுகிறது.

2. நம் குலத் தலைவர்களில் உயர்தரக் கல்வி கற்றவர்களுக்கு அரசாங்கத்தார் மேலான உத்தியோகங்கள் விசேஷமாகக்கொடுத்து வர வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. நம் வகுப்பினர்களுக்குள் ஏற்படும் விவகாரங்களைக் கோர்ட்டுகளுக்குக் கொண்டு போய்ப் பணத்தை வீண் விரயஞ்செய்யாமல் பஞ்சாயத்துகள் மூலமாய்த் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

4. நம்மவர்கள் நடத்தும் கலியாணங்களில் அனாவசியமான செலவுகளைச் செய்து பணத்தை வீண் செலவாக்காமல் இருக்கும் படி நம் குலத்தவரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. விருதுநகரிலுள்ள நமது நாடார்கள் உயர்தரப் பாடசாலையை கல்லூரியாக்கி நாடார் மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தத் தலைவர்களை வேண்டிக் கொள்ளுகிறது.

6. தேவஸ்தானக் கமிட்டிகளுக்கு நம் குலத்தவரை நியமனம் செய்யவும் நியமிக்கவும் அரசாங்கத்தாரை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

7 தென்னிந்தியா ரயில்வேத் தொழிலாளர் சமீபத்தில் நடத்திவரும் சத்தியாக்கிரகப் போரை இம்மகாநாடு ஆதரிக்கிறது.

8. அரசாங்கத்தாருக்கு வரி கொடுப்பதில்லை என்று உறுதி செய்து வரி கொடா இயக்கமென்ற சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடித்து வேலை செய்து வரும் பர்தோலி இயக்கத்தை இம்மகாநாடு ஆதரிக்கிறது.

9. நம்குல ஏழை மாணவர்கள் தங்கள் ஸ்காலர்ஷிப்பிற்காக லக்ஷம் சீட்டுக்கொண்ட ஒரு லாட்டரியை ஏற்படுத்தும்படி தீர்மானிக்கிறது.

10. நம்மவர்களிருக்கும் ஒவ்வோர் இடத்திலும் கிளைச் சங்கங்களும், வாசக சாலைகளும் ஏற்படுத்தத் தீர்மானிக்கிறது.

11. நாடார் குலத் தலைவர்கள் பெரும்பான்மையாய் நாடார் சங்க அங்கத்தினர்களாய்ச்சேர வேண்டுமென்று வற்புறுத்துகிறது.

12. நம் குலத்தவர் ஆலயங்களில் ஜீவ பலியிடுவதைத் தீவிரமாய்க் கண்டிக்கிறது.

13. நம்மவர்கள் திருமண காலத்தில் நடத்திவரும் சடங்குகளுடன் மணமக்களுக்கு உண்டாகும் சக்திகளில் ஆண்களுக்கு 12 வயதுவரையிலும், பெண்களுக்கு 10 வயது வரையிலும் கட்டாயக் கல்வியைப் பயிற்சிசெய்து வைப்பதாகக் 'கலை உறுதிச்சடங்கு' அக்னிசாக்ஷியாய்ச் செய்து முடிக்க வேணுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

14. நமது குலத்திலுள்ள தலைக்கட்டு வரியை யாவரும் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்க் கேட்டுக் கொள்ளுகிறது.

15. நாடார் பள்ளிக்கூடங்களில் ஹிந்தி பாஷையை அவசியம் கற்றுக் கொடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

16. நாம் யாவரும் வீட்டுத் தொழிலாக நடத்திவந்த கைராட்டின நூல் நூற்றலை மறுபடியும் கைக்கொள்ளுமாறும், அந்நூல் கொண்டு செய்த உடை அணியவேண்டுமாயும், நமதேசக் கைத் தொழில்களை ஆதரிக்கக் கூடுமானவரை அந்நிய தேசசாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், நம்மவர் ஊர்களில் சிறுவர் சிறுமியர்களுக்குக் கைத்தொழில் பாடசாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அவைகள் முன்னேற்றத்திற்கு ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

17. ஸ்தல ஸ்தாபனங்களில் நம்மவர்களுக்குத் தற்சமயம் போதுமான ஸ்தானங்களில்லாததால் இனிவரும் தேர்தல்களில் ஒவ்வோர் இடத்திலும் நம் குல அபேக்ஷகர்கள் முன் வந்து அதிகமான ஸ்தானங்களைக்கைப்பற்ற முயற்சிடுக்க வேண்டுமென்றும், சிறுபான்மையோருள்ள இடங்களில் அரசாங்கத்தார் நம்மவருக்கு நாமினேஷன் மூலம் ஸ்தானங்கள் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

18. அரசாங்கத்தார் சமீபத்தில் தேவஸ்தானங்களுக்குக் கமிட்டி நியமனஞ் செய்த விஷயத்தில் இவ்வகுப்பினர்களை நியமனஞ் செய்யாததுபற்றி இக்கூட்டம் தனது அதிருப்தியைத் தெரிவிக்கிறது.

19. நமது சொந்த ஆலயங்களில் நமது குலத்தவர்களையே அர்ச்சகராக நியமிக்கவேணுமென்று தீர்மானிக்கிறது.

20. சென்னை அரசாங்கத்தாரின் கலால் சம்பந்தமான கோட்பாடானது சன்மார்க்கத்துக்கு விரோதமானதாயிருப்பதால் அதை முற்றிலும் மாற்றி லாகிரி வஸ்துகளின் விற்பனையை நாளுக்குநாள் குறைத்து ஐந்து வருடத்திற்குள் பூராவும் நிறுத்திவிட ஏற்பாடு செய்யும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

---

## வாலிப நாடார் 2-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

### நடவடிக்கைகளின் விபரம்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

வாலிப நாடார் இரண்டாவது மகாநாடு, நாடார்மகாஜன 12-வது மகாநாட்டின் 2-வது தினத்தில் நாடார் 12-வது மகாநாடு கூடிய "பாண்டிய விலாஸ்" சிங்காரக் கொட்டகையில் 5—7—28— காலையில் கூடியது மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ கலியாணசுந்தர முதலியார் அவர்களையும், மகாநாட்டு வரவேற்புக்கழகத்தலைவர் ஸ்ரீ மாணிக்கவேலு நாடார் அவர்களையும, மகாநாட்டிற்கு விஜயஞ் செய்திருந்த நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள், பாண்டு வாத்தியம், நாகசுரம், யானைகள் மற்றும் சகல மரியாதைகளுடன் நகரின் முக்கியமான வீதிகளின் வழியாய் ஊர்வலமாய் அழைத்துச் சென்றார்கள். கடைசியாய் ஊர்வலம் மகாநாட்டுப் பந்தலின் முன்பாக வந்திறங்கியதும் இருவருக்கும் மாலைகளிடப்பெற்று சகல மரியாதைகளும் செய்யப்பட்டன.

மகாநாட்டிற்குச்சுமார் 1500பிரதிநிதிகள்வரையில் பட்டிவீரம்பட்டி, பொறையாறு, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, சிவகாசி, சாத்தூர், உசிலம்பட்டி, ஆண்டிபட்டி திருச்சுழி, கமுதி, கல்லூரணி, சென்னை முதலிய இடங்களிலிருந்தும் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வெலி ஜில்லாக்களிலுள்ள பல ஊர்களிலிருந்தும் விஜயஞ் செய்திருந்தனர்.

மகாநாட்டு நடவடிக்கைகள் காலை சரியாய் 10-மணிக்கு ஆரம்பமாயின. கடவுள் வாழ்த்திற்குப் பிறகு ஸ்ரீ ஏ. கே. அண்ணாமலை நாடார், தலைவர் ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாருக்கு உபசாரணைக் கமிட்டியின் சார்பாக ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார். பின்னர் உபசாரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ எம். வி. எம். மாணிக்கவேலு நாடார் தமது வரவேற்புப் பத்திரத்தை வாசித்தார்.

வரவேற்புப் பிரசங்கம் வாசிக்கப்பட்டு முடிந்ததும் மதுரை ஸ்ரீ ப. ரா. முத்துசாமி நாடார் ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களை மேற்படி மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி பிரேரபிக்க அது அருப்புக்கோட்டை ஸ்ரீ க. அருணாசலநாடாரால் ஆமோதிக்கப்பட்டு முறையே ஸ்ரீ எஸ். எஸ். பழனிச்சாமி நாடாரால் ஆதரிக்கப் பட்டு நிறைவேறியது. பலத்த கரகோஷத்தினிடையே திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் தமது அக்கிராசன பீடத்தமர்ந்தார்.

பிறகு அக்கிராசனப் பிரசங்கம் தலைவர் அவர்களால் வாசிக்கப்பட்டது. தலைவருடைய பிரசங்கம் முடிந்ததும் கீழ்கண்ட தீர்மானங்கள் முறையே பிரேரபிக்கப்பட்டும் ஆமோதிக்கப்படும் ஏகமானதுடன் நிறைவேறின:—

1. இளைஞர்களின் கல்வி அபிவிருத்திக்காகக்கிராமங்கோறும்கல்விச் சாலைகளை ஏற்படுத்தி ஆண் பெண் இருபாலர்க்கும் கட்டாயமாகக் கல்வி போதிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

2. இளமை மணத்தை அடியோடு வெறுப்பதுடன் கலியாண காலங்களில் பெண் வீட்டாரிடமிருந்து ரொக்கமாகவும் நகைகளாகவும் கட்டாயப்படுத்திப் பணம்வாங்கக் கூடாதென்றும். கலியாணச் செலவுகளைச் சிக்கன முறையில் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

3 பெண்கல்விபரவ வேண்டிய தற்கு ஒத்தாசையாகக் கல்வியில்லாதபெண்களைக் கலியாணம் செய்து கொள்ளக் கூடாதென்று ஒவ்வொரு வாலிபரையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

4. தேசத்தின் நன்மைக்காகச் சமய ஆசார சீர்திருத்தங்களை எவ்வளவு தூரம் செய்ய வேண்டுமோ அவ்வளவும்செய்வதில்ஒத்தாசையாக இருக்க வேண்டு மென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

5. தியாகி ஒருவரின் தலைமையின் கீழ் வாலிபக் கூட்டங்கள் வெளிக்கிளம்பி, நமது சமுகத்தினிடையே நாடார் மகாஜன சங்கத்தின் பிரசாரம் செய்ய முன்வர வேண்டுகிறது.

6. நாடார்குலவாலிபதிலகமாய் விளங்கி பல பொது ஸ்தாபனங்களில் ஈடுபட்டுசமுகத்துக்காகவும், தேசத்துக்காகவும் அருந்தொண்டாற்றிவந்த திருமேனி நாத நாடார் அவர்களுடைய மரணத்தைக் குறித்து இம்மகாநாடு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

மேற்படி தீர்மானங்கள் நிறைவேறியபின், தலைவருடைய முடிவுரையுடன் முக்கியஸ்தர்களுக்கு மாலையிடப் பெற்றுவந்தனத்துடன் மகாநாடு இனிது முடிவடைந்தது.

---

## 'நாடார் மகாஜன சங்கம்' ஆபீஸ் மாற்றம்.

### சகல பொறுப்புகளும் சாமான்களும் ஒப்படைத்தல்.

1928 ஞு ஜூலை மீ 21௳ நாடார் மஹாஜன சங்கம் புதுக் காரிய தரிசிகளான ஸ்ரீமான்கள் ஊ. பு. அ. சௌந்தர பாண்டிய நாடார் அவர்கள், கூ. ச. நா பெரியதம்பி நாடார் அவர்கள் ஆகிய இருவர்களுக்கும் மேல்படி சங்கத்திற்கு காரிய தரிசிகளாக 4—7—28 வரை இருந்துவந்த ஸ்ரீமான்களான பா. ம. பாண்டிய நாடார் அவர்கள், ப. வ. சோமசுந்தர நாடார் அவர்கள் ஆகிய இருவர் களுக்காக ஆஜராயிருந்த ஸ்ரீமான் பா.ம. பாண்டியநாடார் அவர்கள் மாற்றிக் கொடுத்த பொறுப்பு விபரம் பின் வருமாறு:—

5-7-28-ல் அருப்புக் கோட்டையில் நடைபெற்ற நமது நாடார் மஹாஜன சங்கம் 12-வது வருடாந்தர ஜெனரல் மீட்டிங்கின் தீர்மானத்தின்படி இன்று தேதியில்மேல்படி சங்கம் சம்பந்தமாக உள்ள சகல விதமான பொறுப்புகளும் இதன் மூலமாக ஒப்புக் கொடுப்பதுடன் இத்துடன் சவ தரிக்கலான லிஸ்டில்கண்ட கணக்குகள் பர்னிச்சர் சாமான்கள் வகையறா சகல சாமான்களும் மேல்படி சங்கம் சம்பந்தமான இந்தியன் பாங், போஸ்டாபீஸ், சேவிங்ஸ் பாங்குகளிலுள்ள பிக்ஸட் டிபாஸிட் முதலிய தொகைகளின் அத்தாட்சிகளும்ஒப்புக்கொடுத் திருக்கிறேன்.

(ஒப்பம்) பா. ம பாண்டிய நாடார்.

### சாமான் களின் விபரம்.

பெரிய தேக்கு பீரோ 2. கண்ணாடி தேக்கு பீரோ 1. அட்டாளை 2. டிராயர் வைத்த பெரிய மேஜை 2. டிராயர் வைத்த சிறிய மேஜை 1. தோத கத்தி நாற்காலி 20. பெண்ட் உட் நாற்காலி 6. சாதா புஜம் வைத்த நாற்காலி 2. மெத்தை யுடன் கூடிய சேர்மன் நாற் காலி 2. பாக் பெஞ்சு 4. சாதா பெஞ்சு 2. தபால் பெட்டி 1. ஜாதிக் காய் மாப் பெட்டி 4. சங்கம் போர்டு 1. நோட்டீஸ் போர்டு 1. ஆபீஸ் போர்டு 1. கோட் ஸ்டாண்டு 4. சுவர் கெடி காரம் 1. காப்பியிங்பிரஸ் 2. சைக்குலோஸ் டைல்மிஷன் 1. டம்லர் 2. சேட்டு விளக்கு 2. 15லைன் பவர் லாம்பு 2. சுவர் ஒட்டி லைட் 1. இட்டிலி தட்டு 4, மேல் மூடி 1 உள்பட இட்டலி கொப்பரை 1. மேஜை துணி 2. கண்ணாடி பேப்பர் வெயிட் 3. காலிங் பெல் 1. நிக்கல் பென் ஸ்டாண்டு 1. கண்ணாடி பென் ஸ்டாண்டு 1. பம்பு, பெல், உள்பட B. S. A. சைக்கிள் 1. போட்டோ கண்ணாடி படம் 12. வந்தனோபசார கண்ணாடி படம் 1. அத்த நாகப்பூச்சு லீவர் பூட்டு 6. நிக்கல் புளாட்டர் 1. டைமபீஸ் 1. பேப்பர் கிளிப்பு 4. அலுமினியம் கிண்ணம் 1. புருஷ் 1. ரப்பர் ஸ்டாம்பு 17. ஈய ஸ்டாம்பு 1. நிக்கல் அரக்கு சீல் 1. 5 அடி டேப்பு 1. பாக்கெட் பாலென்ஸ் 1. ஜாதீயக் கொடிகள் 2. ரப்பர் ஸ்டாம்பு பாட் 3. வாளி 1. தகர உண்டியல் பெட்டி 8. கதவு பெட்டிப்பூட்டு 1. திருநெல்வேலி ஜில்லா மேப் 1. பன்ஸ் மிஷின் 1. ரூல் தடி 1. கத்திரிக் கோல் 1. பேனாக் கத்தி 1. பின் குஷன் 1. பெரிய டிபன் பாக்ஸ் 1. புரோவிஷனல் சர்டிபிக் கேட் பிளாக் 1. ஜரிகை மாலை 1. வால் ஸ்டாண்டு 2. சட்ட புஸ்தகம் 237. சப்ளிமெண்ட் ரூல் 257. பியூன் கோட்டு, டிபச்சை பிளானல் டவாலி, டி. நாடார் மஹா ஜன சங்கம் 1 நீர் வெங்கல செதுக்கு வில்லை.

(ஒப்பம்) பா. ம. பாண்டிய நாடார்.

இதில் கண்ட சாமான்களை நாங்கள் ஒப்புக் கொண்டு டிசாமான்களுக்கு ஒரு நகலும் வைத்துக் கொண்டோம்.

(ஒப்பம்) ஊ. பு. அ. சௌந்தர பாண்டிய நாடார்,

(ஒப்பம்) கூ. ச. நா. பெரியதம்பி நாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## வாலிப நாடார்

## 2—வது மகாநாடு,

### அருப்புக்கோட்டை.

## ஸ்ரீமான் மா. வே. மா.

## மாணிக்கவேல்

### நாடார் அவர்களின் வரவேற்புப் பிரசங்கம்.

(முன் தொடர்ச்சி)

பொன் விளையும் பூமியெனப் புகழப்படும் நமது நாட்டின் தற்போதைய விவசாய நிலைமை வெகு மோசமாயிருக்கிறது. ஏன் மோசம்? வளப்புக் குறைவா? மழையில்லையா? இல்லை இல்லை; அவைகளாவல்ல. பின் என்னெனில், மக்கள் மனோநிலையே மோசமாய் விட்டது என்க. எப்படியெனில், நவீன முறையில் வாழ்வு கற்பிக்கப்படும் நகரங்களை நாடி கிராம ஜனங்கள் தினே தினே குடி புகுகிறார்கள். நகரங்கள் பெருக்கடைவதும் கிராமங்கள் அழிவதும் தற்காலத்தில் கண்கூடு. முற்காலத்திலோ புதுப் புது கிராமங்கள் தோன்றி ஆங்காங்குள்ள புறம்போக்கு நிலங்களைத் திருத்தி வாழ்வு நடத்த முற்பட்டிருந்தனர். இனியும், இவ்வித நிலையிலேயே நாடு இருக்குமாயின் விவசாயம் என்பது என்ன? என்ற கேள்வி கேட்கும் நிலைமையில் எய்தக்கூடும் என்றே அஞ்சுகிறேன். ஒன்றிரண்டு ஒட்டிக்கொண்டிருப்பவர்களும் சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளையேபோல் விவசாய ஆராய்ச்சியின்றியும் நவீன முறைக் கேற்றவாறு திருந்தாமலும் ஏதோ செய்து முடிக்கின்றார்கள். இவைகளால் நாடு செழிக்குமென்று நினைக்கிறீர்களா? நாடு செல்வப் பெருக்கடையுமென்று நினைக்கிறீர்களா? உணவும் பொருள் விளைவு அதிகப்படுமென்று நினைக்கிறீர்களா? முடியவே முடியாது. ஆகவே நமது மாணவர்களுக்கு விவசாயக் கல்வியைப் போதிக்க வேண்டும். விவசாயிகளுக்கு பணச்சகாயமும் பெரிய ஆதரவும் அரசாங்கத்தாரும் கூட்டுறவு பாங்குகளும் செய்யவேண்டும். இவ்விதக் குறைபாடுகள் நீங்க அவசரமான வேலைகளை நடத்தினாலல்லாது நாடு க்ஷேமம் பெற இயலாது. எனவே அன்பர்களே! விவசாயத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து அவற்றின அபிவிருத்தியில் ஈடுபடுதலே நாட்டைக் காப்பாற்றுவதாகும் நாமும் சுபிக்ஷமுற ஏதுவாகும்.

### சமுக சீர்திருத்தம்.

இனி நமது சமூக வாழ்க்கையில் மாறுதல் அடையவேண்டியதும் சீர்திருத்த வேண்டியதும் யாவன; அவற்றிற்காய் நாம் செய்ய வேண்டியது யாவை எனக் கவனிப்பது நம்பாற்பட்ட கடமையாம். திருத்தச் செய்யப் பிரசாரம் நிகழ்த்துவதும் நமது வேலையாம்.

முதலாவதாக நமது இளஞ்சிறார்களைப் போஷித்துவரும், நடத்திவரும் முறைபற்றி சில கூற விரும்புகிறேன். "நூலைப்போற் சேலை, தாயைப்போல் பிள்ளை" என்று நாட்டுப் பழமொழியாக வழங்கி வருவதின் கருத்தென்னவென்று கவனித்தீர்களா? அதாவது சிசுவுக்கு ஆதாரணையாக விருந்துவரும் தாயின் தன்மை, குணம், நடக்கைதான் அந்த சிசுக்களுக்கும் பற்றுமென்பதாம். எனவே நாம் நல்ல பிள்ளைகளை உடைத்தாயிருக்க வேண்டுமானால், நற்குண நற்செய்கையோடு கூடிய குழந்தைகட்குப் பெற்றோர்களா யிருக்கவேண்டுமானால், அன்பு, தயை, சாந்தம் கொண்ட மக்களை யுடைத்தவர்களா யிருக்கவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? பிள்ளைகளை இன்சொல்லால் அழைக்கவேண்டும். அன்பாய் நடத்தவேண்டும். நல் விஷயங்களைப் போதித்து நற்காரியங்களைச் செய்யத் தூண்ட வேண்டும். களங்கமற்ற மனத்தையுடைய—நெருப்பென்றும், தண்ணீரென்றும் அறியமாட்டாத பாலர்களிடத்தே, இளைஞர் முன்னிலையிலே தூஷணை வார்த்தை மொழிவதும், கோபங்கொள்வதும், அடாத காரியம் செய்வதும் எப்படியாகுமென்றால் அதையே அவர்களுக்கும் கற்பிப்பதாகுமேயன்றி, அவர்கள் கேடுற இடமளிக்குமேயன்றி அவர்களை நல்வழிப்படுத்தா தென்பதுறுதி. எனவே சற்புத்திரர்களையே விரும்பும் நாம் சன்மார்க்க ஒழுக்கங்களையே அவர்களிடம் பேசுவோமாக; நடந்து கொள்வோமாக.

முக்கியமாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டிய அவசரப் பிரேரணை ஒன்று உண்டு. இது மக்களுக்கு மரியாதையை அளிப்பதோடன்றி பணச் செலவையும் மட்டுப்படுத்துவதாகும். அதுதான் நமது சுப அசுப காரியங்களுக்கு அனாவசியமாகவும் தரந்துக்கு மீறியும் பெருமைக் கச்சேரிக்காகவும் பெரும் பொருளை விரயஞ்செய்து வருவதாம். ஒரு நூலோடும் தாலியோடும் பந்துக்களுக்கு ஒருவேளை போஜனத்தோடும் முடிகிற (திருமண) காரியத்தை எவ்வளவு பணச்செலவில் கொண்டுபோய் உயர்த்தி வைத்திருக்கிறோம்!

இவ்வித வழக்கத்தையும் மனத்தையும் விட்டொழிக்க ஒருவழி காணுதல் அவசியம். அவ்வழி புதிதாகத் தோற்றலாம். விநோதமாகப் புலப்படலாம். எதுவும் ஆரம்பத்தில் வைந்நிய காரத்தனமாகத் தான் தெரியும். பின் வரவர சரிப்பட்டுவிடும். எனவே நம்மவர்களில் நடக்கும் திருமணச் சடங்கை ஆங்காங்குள்ள ஆலயங்களில் வைத்துப் பெரியார் ஒருவர் முன்னிலையில் திருமணச் சடங்கை நிறைவேற்றி அன்றொரு நாளையோடே வைபவத்தை முடித்துக்கொள்வது சிறப்புடைத்தாம். இம்முறை கைப்பற்றின் அதுதான் முறையாம். மற்றும் சுப காரியங்களிற்றான் இவ்விதமென்றால் அசுப காரியங்கட்கும் பெரும் பணம் செலவழிப்பதை நினைத்து வருந்தாது விடுவதற்கில்லை. இத்துறையும் மாற்றங்கொள்ளப் பிரயாசை எடுக்க சீர்திருத்தக்காரர்கள் முன்வரல்வேண்டும்.

### மத சீர்திருத்தம்.

மத விஷயமாய் எடுத்துக் கொண்டால் நம்மில் இந்துக்களும் கிறிஸ்தவர்களுமே இருக்கின்றனர். இவர்களின் சீர்திருத்த விஷயமாகவோ அபிவிருத்தி விஷயமாகவோ இங்கு குறிப்பிடுவது அவசியமென்றே கருதுகிறேன். ஆயின், கிறிஸ்தவ மதத்தைப் பற்றி அதிகமாய் தெரிந்து கொள்ளாத நிலைமையினும் கிறிஸ்தவ சகோதரர்களுடன் அதிகமான பழக்கமில்லாத நிலைமையிலும் கிறிஸ்துமத விஷயமாய் யான் ஒன்றும் சொல்லாது விடுவது பற்றி வருந்துகிறேன். மற்றெத்தேசத்தைக் காட்டிலும் மதத்தில் இந்தியா அதிகப்பற்றுக் கொண்டதென அம்பலத்தில் சொல்லப்படுகிறதேயொழிய கால வியல்புக்கேற்ப மற்றெத்துறையும் சீர்திருத்தம் பெற்றுவரும் இக்காலையில் (இந்து) மதத்தைப்பற்றிய பேச்சே எழாமலிருந்து வருவதின் ரகசியமென்னவோ தெரியவில்லை.

இந்துமதத்தைத் தழுவியவர்களுக்கே அதைப்பற்றிப்பேச யோக்கியதையில்லையென்ற விதி பரம்பரையாயிருந்து வந்திருப்பதாயிருக்கலாமாவெனச் சிலர் கேட்கிறார்கள். ஆனால் மதத்தின் பேரால் இந்தியர் அடிமைப்பட்டிருப்பதென்பது பிரசித்தம். இதை யாரே ஒப்புக்கொள்ளார்? இதனாற்றான் ஏனைய துறைகளிலும் இந்தியா பின் நிற்கிறது என்று பலர் மொழிவதையும் இங்கு ஆலோசித்தல் வேண்டும். ஆராயின் இதிலும் பொருளில்லாமலில்லை.

நம்மைப் பொறுத்த மட்டில் எவ்வளவோ மூடக் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் நாளிதும் மதத்தின் பேரால் நாம் நிறைவேற்றிவருகிறோம். ஒரு காரியத்தைச் செய்வதன் முன், அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து அதைச் செய்தால் நன்மையா? தீமையா? மரியாதையா? ஒழுங்கா? அது இல்லாதிருந்தாலென்ன? இது போன்ற கேள்விகளைக்கொண்டு நிராலோசனை புரிந்து தீர்மான மான முடிவின் பேரில் நன்மைதான்; செய்யாதிருப்பதால் தோஷம் நிகழும் என்று தோன்றினாலொழிய எதையும் மூட நம்பிக்கைகொண்டு செய்வது அர்த்தமற்றதாகி முடியும்.

இதனால் மதப்பற்று இருக்க வேண்டாமென்றாவது இந்துமதத்தை இகழ்படுத்துகிறே னென்றாவது நினைக்க வேண்டாம். ஏனைய மதத்தினர் தங்கள் மதத்தினிடத்தில் எவ்வளவு ஆதிக்கம் வகித்திருக்கின்றனரோ அத்தகைய சுதந்திரம் இந்து மதத்தினிடம் ஏன் இருக்கக் கூடாதென்று தான் கேட்கிறேன். எனவே தன் மதிப்புடன் கூடிய எந்த மதமும் நமக்குச் சம்மதந்தான்.

### தேசியமும், அரசியலும்.

ஒரு குடும்பஸ்தன் ஒரே நோக்கில் தன் மனைவியினுடையவும், குழந்தைகளினுடையவும், பெற்றோர்களினுடையவும் சகோதர சகோதரிகளினுடையவும் க்ஷேமத்தை எப்படி நாடியிருக்க வேண்டியதிருக்கிறதோ அவ்வகைக்கே மனிதராய்ப் பிறந்தாரனைவரும் தமது குலம், மதம், தேசம் ஆகியவை நலன் நாடி உழைத்தல் கடமையாம். எனவே நமது சொந்தத் தாய் நாட்டின் க்ஷேமத்தில் நமது கருத்தைச் செலுத்தப் பின்னிற்போமல்லோம். இணையற்ற தலைவராம் மகாத்மா காந்தியடிகள் இந்தியர் நிறைவேற்றிவைக்க விடுத்த நிர்மாணத் திட்டங்களாய தீண்டாமை விலக்கல், கதரை ஆதரித்தல், மதுவிலக்கல் ஆகியவைகளில் நாம் பூரணமாய் வேலை நடத்தக் கடமைப்பட்டே யிருக்கிறோம் என்பது அதை நாம் அறிந்தும் அதன்படி நடந்தும் வருவதிலிருந்தே தெரியவரும். இனியும் அவ்வழிபற்றி உழைக்க ஆர்வத்துடன் முன்வரும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### தேகப் பயிற்சி.

"உடலை வளர்த்துயிரை வளர்த்தேன்" எனத் திருமூலர் கூறியவாறு வாலிபர்களாய நாம் உடலைப் பேணுவது அவசியம். தேகாப்பியாசத்தை நித்திய கருமங்களிலொன்றாய் ஏன் கொள்ளலாகாது? சரீர வலிமைபெற்று வீரந்ததும்ப விருந்தாற்றான் நாம் எடுத்துக் கொள்ளும் காரியாதிகளை முட்டின்றி நிறைவேற்றிக் கொள்ள ஊக்கமும் உற்சாகமும் மனோவலியும் கிட்டுமென்பதை கவனத்தில் வைக்க வேண்டுகிறேன்.

### ஸ்தல ஸ்தாபனம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் வரவர மோச நிலை அடைந்து வருகின்றன. பொது நலங் கருதிய—நேரிய வழிபற்றிய ஊழியரொருவருக்கு அங்கு இடமில்லை. துணிந்து எவ்வளவு தூரம் பணத்தையும் செல்வாக்கையும் எவர் கொட்டுகிறார்களோ அவர்களுக்கேஇருக்கை யளிக்கும் மார்க்கெட்டுகளாக மாறிவிட்டன. இவை கடைசியில் சாதாரண மக்களின் பிரதிநிதியற்றனவாய் முடியலாமென்பதில் என்ன சந்தேகம்? இதில் தக்கவாறு ஜனங்கள்கவனித்தால் தான் பொது ஜனங்கள் நன்மைபெற முடியும். உரிமை பெற வியலும். எனவே நமக்குள்ள சந்தர்ப்பத்தையும் நாம் விடாது நம்மவர்களுக்குள் போட்டியிடாது ஐக்கியமாயிருந்து எவர்க்கும் இதமாய் நடந்து கொள்ள முன்னணியில் நின்று வேலை செய்வோமாக.

### பத்திரிகைகள்.

தற்காலத்தில் பத்திரிகை பார்க்க வேண்டுவது மிகமிக அவசியம். பத்திரிகை படியாது உலகஞானம் உலக நடப்பு அறிய முடியாது. ராஜீய தேசீயத்தோடன்றி வியாபாரம் விவசாயம் மற்றும் சன்மார்க்கத்துக்குரிய பல விஷயங்களும் படித்துணரும் நீதிக்களஞ்சியமாயிருக்கிறது. ஜாதிப் பத்திரிகையிருந்தாற்றான் நமது சங்கத்துக் குதவியாயிருந்தும் இவ்வித மகா நாட்டின் சிறப்புக்குக் காரணமாயிருந்தும் வரும். ஜாதிப் பத்திரிகை அபிமானம் வரவரக் குறைந்து வருவதாகக் கேள்வியாலும் இரண்டொரு பத்திரிகைகள் ஓராண்டிற்குள் நின்று விட்டதிலிருந்தும் தெரியலானேன். இவ்வித மிருத்தல் கூடாது. தினமொரு பைசா மனமொடு சேர்த்துக் கொடுத்தாலே போதும். அதைக் கொண்டு ஒரு பத்திரிகையை ஆதரித்து வரலாம். பத்திரிகை எவ்வளவுக் கெவ்வளவு அபிவிருத்தி யடைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நமது ஜாதியின் முன்னேற்றமிருக்கிறது. எனவே குலப்பத்திரிகைகளை ஆதரியுங்கள். பத்திராதிபர்களை உற்சாகப்படுத்துங்கள். நம்மில் பத்திரிகைகட்கு கட்டுரை எழுதும் அன்பர்கள் மிகச் சொற்பம். இத்துறையில் ஏன் இறங்கலாகாது? [illegible] கருதினும் கிடைக்காமற் போகா. பொதுஜன க்ஷேமம் கருதினும் பயனில்லாமற் போகா. இத்துறையிலும் நம்மவர் அனுபவம் பெற்று முன்வர ஆசைப்படுகிறேன். குலப்பத்திரிகைகள் இவர்களை வரவேற்கு மென்று நம்புகிறேன்.

### முடிவுரை.

### பெருமை மிகு பொறுமையாளர்களே!

நமது சமூக தேச முன்னேற்றத்திற்கான காரியங்களைத் தாமதியாமல் ஆலோசித்துத் தீர்மானங்கள் செய்வதுடன் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர உங்களனைவரையும் வணக்கமாய் வேண்டுகிறேன். நம்மவர் முன்னேற்றத்தில் நமக்குள்ள பொறுப்பையுணர்ந்து நடத்தல் வேண்டும். கிராமம் புனருத்தாரண மடையவும் நமது சங்கத்தின் பிரசார வேலை குறைந்திருக்கும் இது வேளை புத்துணர்வு கொடுக்கவும் முனைந்து வேலை நடத்தப் பிரசாரம் செய்ய வெளிக்கிளம்ப வேண்டும். ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி வைத்து பிரசங்க வாயிலான் உணர்ச்சி பரப்பவேண்டும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற்றோன்றாமை நன்று" என்று தெய்வத்தன்மை வாய்ந்த திருவள்ளுவனார் கூறியபடி நமது ஜீவியத்தில் தனக்கன்றி பிறர்க்காய் கட்டாயம் ஒன்றையேனும் செய்தே தீரவேண்டும். ஒன்றும் நன்றேயாகவும் இருத்தல் வேண்டும். எனவே பூவுலகில் தன் புகழ் நாட்டிப் போவதே மானிட ஜென்மம் பெற்றதாலாய பயன் என்பதை அறியுங்கள். அறிந்து நடவுங்கள்.

கனவான்களே! இங்கொன்று சொல்வது நமது கடமையாம். தமது மாணவகால முதலே பல பொதுக் காரியங்களிலும் வெகுவாய் ஈடுபட்டு வந்த வாலிப திலகம் நண்பர் திருமேனிநாதர் அவர்கள் நம்மிடமிருந்து பிரிந்து அரனடி சேர்ந்தமைபற்றி நமக்குள்ள அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் புரிந்த ஊழியம் ஒன்றல்ல, இரண்டல்ல, உற்றுநோக்கின் மதிக்கொணாதவைகளாகும். அவைகளை ஈண்டுரைப்பது சாத்தியமல்ல. நம்மில் சிறந்தாராகிய அன்னார் விட்டுச் சென்ற எவ்வெக்காரியங்களுண்டோ அவைகளில் நாம் ஈடுபட்டு சேவை சாதித்தலே அவர்க்கு மரியாதை செய்வதாகும்.

வாலிபர்களுக்கு உணர்ச்சி யூட்டுதலையே, நல்வழி காட்டுதலையே சமூக தேசியப் பற்றூட்டுதலையே தமதருங் கடமையாகக்கொண்டு, நமது மகா நாட்டிற்குத் தலைமை பூண மனமுவந்து இவண் விஜயஞ்செய்திருக்கும் "நவசக்தி" ஆசிரியர் உயர்திருவாளர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களின் பொன் மொழிகளை நமது உள்ளத்தே பதித்து அதன்படி யொழுக இறைவன் அருள் புரியப்பிரார்த்திக்கின்றேன்.

### பெரியோர்களே! தோழர்களே!!

பொறுமையுடன் இதுகாறும் எனது புன்மொழிகளைச் செவிமடுத்த உங்கள் யாவர்க்கும் எனது வணக்கம் உரியதாகுக. எனது சிறிய பேச்சில் பெரிய பல குற்றங் குறைகளிருக்கலாம். யானோ மனிதன். தீங்கும் பொல்லாங்கும் பரவி நிற்கும் இக்கலியுகாந்தியத்தில் வசிப்பவன். தவறுதலுக்கு ஆளாகலாம். எனவே எனது புன்மொழிகளில் காணும் குணத்தைப் பேணி குற்றம் க்ஷமித்து மன்னிக்குமாறு மறுமுறையும் பிரார்த்திக்கின்றேன. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

### நெருங்கிவிட்டது! நெருங்கிவிட்டது!

"நாடார் மகாஜன சங்கவாரக்கொண்டாட்டம் நெருங்கிவிட்டது. கொண்டாட்டத்திற்குரிய பஜனைக்கு அவசியம் தேவையானது சென்னை, ச. சு. சங்கரலிங்கநாடார் இயற்றிய "வாரக் கீர்த்தனை" புஸ்தகந்தான். நாடார் குல சம்மந்தமான பாட்டுகள் நிறையக் கொண்டது. விலை அணா 3. தேவையுள்ளோர் நாடார் குல மித்திரன்" ஆபீஸுக் கெழுதவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



அக்கிராசநாதிபதி அவர்களே!

கனவான்களே!

1927-ஞு அக்டோபர் மீ 2உ கும்பகோணத்தில் நடைபெற்ற வருஷாந்தர ஜெனரல் மீட்டிங்கில் 1925-ஞு ஏப்ரல் மீ 1உ முதல் 1927-ஞு மார்ச்சு மீ 31உ வரையில் முடிந்த இரண்டு வருஷத்தில் செய்த வேலைகளையும், வரவு செலவு கணக்குகளையும் பற்றிய ரிப்போர்ட்டு சமர்ப்பிக்கப் பெற்றது. இப்போது 1927-ஞு ஏப்ரல் மீ 1உ முதல் 1928-ஞு மார்ச்சு மீ 31உயோடு முடிந்த ஒரு வருஷத்தில் சங்கம் செய்திருக்கும் வேலைகளையும் வரவுசெலவு கணக்குகளையும் பற்றிய ரிப்போர்ட்டை சமர்ப்பிக்கிறோம்.

### கவுன்ஸில்.

அபயிற்கண்ட உத்தியோகஸ்தர்களும் 30 ஆர்டினரி அங்கத்தினர்களும் 1927-ஞு அக்டோபர் மீ 2உ கும்பகோணத்தில் நடைபெற்ற ஜெனரல் மீட்டிங்கில் கவுன்ஸில் அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பெற்றனர்.

பிரஸிடெண்டு:—ஸ்ரீமான் வெ. சுடலைமுத்து நாடார் அவர்கள்

வைஸ் பிரஸிடெண்டு:—ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்கள்.

காரியதரிசிகள்:—ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் அவர்கள்,

ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்கள்.

சங்கத்தின் 38-வது விதிப்படி 16-1-23-ல் நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் 10 ஆர்டினரி அங்கத்தினர்கள் கவுன்ஸில் மெம்பராக நியமனம் பெற்றனர்.

இந்த ஒரு வருடத்தில் கவுன்ஸில் 4 தடவைகள் கூடி தனது வேலைகளை நடத்தியது. மீட்டிங்குகளுக்கு வந்திருந்தவர்களின் சராசரி எண்ணம் 16. மீட்டிங்குகளின் நடவடிக்கைகளை அவ்வப்போது "நாடார் குல மித்திரன்" பத்திரிகையிலும், ஏனைய தேசிய தமிழ் தினசரிப் பத்திரிகைகளிலும், சங்கத்தின் அங்கத்தினர்கள் யாவரும் அறியும் பொருட்டு பிரசுரம் செய்திருக்கிறோம்.

### அங்கத்தினர்கள்.

1926-27-ஞு ஆரம்பத்தில் 2213 அங்கத்தினர்களிருந்தனர். சங்கத்தின் 17-வது விதிப்படி இரண்டுவருடச் சந்தாத்தொகையை பாக்கி வைத்திருக்கும் அங்கத்தினர்கள் தம் பதவியை இழந்து விடுவர். மேற்படி விதியை அனுசரித்து அங்கத்தினர் ஜாப்தாவிலிருந்து நீக்கப்பெற்ற மெம்பர்கள் 1103 நீங்கலாக இவ்வருஷ முடிவில் திருநெல்வேலிஜில்லாவில் 286 அங்கத்தினர்களும் இராமநாதபுரம் ஜில்லாவில் 263 அங்கத்தினர்களும், மதுரை ஜில்லாவில் 166 அங்கத்தினர்களும் இதர ஜில்லாக்களில் 395 அங்கத்தினர்களும் ஆக மொத்தம் 1110 அங்கத்தினர்கள் இருக்கின்றனர்.

இவ்வருஷத்தில் வசூலான ஸ்பெஷல் ஆண்டு ஆர்டினரி அங்கத்தினர்களின் சந்தாத்தொகை ரூ 310-0-0.

நாடார் குலத்தினரின் க்ஷேமா சீர்திருத்தத்திற்காகவும், கல்வி அபிவிருத்திக்காகவும் உழைத்துவரும் நமது சங்கத்தின் லக்ஷியங்களை நிறைவேற்றும் பொருட்டு குலாபிமானிகள் மென்மேலும் அங்கத்தினர்களாகச் சேர வேண்டியதவசியம். சங்கத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான அங்கத்தினர்கள் இருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவே சங்கத்திற்கு ஆற்றலும், பணவருவாயும், சவர்ன்மென்டின் மதிப்பும் ஏற்படுகின்றன. ஆண், பெண் வித்தியாசமின்றி நாடார் குலத்தினரெவரும் அங்கத்தினர்களாகச் சேர்வதற்கு உரிமையிருந்தும் சுமார் 13 லக்ஷம் ஜனத்தொகை கொண்ட நமது சமூகத்தில் நாடார் மஹாஜன சங்கத்தின் அங்கத்தினர்களாக 1110 பேர்கள் மாத்திரமிருக்கிறார்களென்றால், அது வருந்தத்தக்கதே! [illegible]

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

1928-ஞு ஜூலை மீ 5உ அருப்புக்கோட்டையில் கூடிய வருஷாந்தர ஜெனரல் மீட்டிங்கில் சமர்ப்பிக்கப்பெற்ற

## ரிப்போர்ட்டு.

தங்களுக்கு அவகாசமும் சந்தர்ப்பமும் வாய்க்கும் காலங்களில் சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்க சிரத்தை எடுத்துக் கொள்வார்களாயின் அடுத்த ஜெனரல் மீட்டிங்கிற்குள் லக்ஷக்கணக்கான அங்கத்தினர்கள் சேர்ந்து விடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அங்கத்தினரனைவரும் தங்களாலியன்ற உதவி புரியும்படி கேட்டுக்கொள்கிறோம்.

### கிளைச் சபைகள்.

1926-27-ஞு ஆரம்பத்தில் 58 கிளைச்சபைகள் சங்கத்தில் இணைக்கப்பட்டிருந்தன. இவ்வருஷத்தில் புதிதாக இணைக்கப்பட்ட கிளைச்சபை 1. ஆக மொத்தம் உள்ள கிளைச் சபைகள் 59-ல் இவ்வருஷத்தில் சங்கத்தின் 17-வது விதிப்படி ரிஜிஸ்டரிலிருந்து நீக்கப்பட்ட கிளைச்சபைகள் 45 நீங்கலாக இவ்வருஷ முடிவில் உள்ள கிளைச்சபைகள் 14. இவ்வருடத்தில் கிளைச்சபைகள் மூலம் வசூலான தொகை ரூ 27-0-0.

சங்கத்தின் லக்ஷியங்களை நமது மஹாஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி அகல தீர்மானங்களை அனுஷ்டானத்திற்கு கொண்டு வருவதற்கும், சங்கத்தின் பண வருவாயை அபிவிருத்தி செய்வதற்கும் ஏராளமான கிளைச் சபைகள் அவசியமாயிருக்கின்றன. ஆதலால் ஆங்காங்குள்ள அபிமானிகள் சங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் கிராமச் சபைகளை சங்கத்தோடு இணைப்பதுடன் கிராமச்சபைகளில்லாத ஊர்களில் கிராமச் சபைகளை ஸ்தாபித்து சங்கத்தின் நன்னோக்கங்களைப் பரவச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நமது ஜன சமூகத்தின் முன்னேற்றம், மஹாஜன சங்கத்தின் ஆற்றலைப் பொறுத்தே நிற்கிறது. சங்கத்திற்கு அங்கத்தினர்களின் தொகையையும் கிளைச்சபைகளின் எண்ணிக்கையையும் பொறுத்தே ஆற்றலும், மதிப்பும் ஏற்பட வேண்டியிருக்கிறது என்பதை மேலே எடுத்துக்கூறியுள்ளோம். மேற்கண்ட இரு காரியங்களிலும் நமது குல அபிமானிகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான முயற்சி எடுத்துக் கொள்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு நமது சங்கத்தின் உயரிய நலனோக்கத்தை எளிதாகவும், விரைவாகவும் நிறைவேற்றலாம். ஆனால் இப்பொறுப்பை முற்றிலும் பொது ஜனங்களிடமே சமர்ப்பித்து விடவும் நாம் விரும்பவில்லை. பொது ஜனங்களின் உற்சாகமும் ஜாதிய சேவையின் உணர்ச்சியும் தலைவர்களின் உன்னத வேலையைச் சார்ந்திருக்கின்றன. தலைவர்கள் தங்கள் கடமையை யுணர்ந்து மஹாஜன சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற சிறிது காலம் சுற்றுப்பிரயாணம் செய்வார்களாயின் நமது நோக்கம் விரைவில் கைகூடுமென நாம் மனப்பூர்வமாய் நம்புகிறோம். இதற்காகவே 16-1-28-ல் நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் "சங்கத்தின் நிர்வாகம் தீவிரமாய் நடைபெறுவதைக் குறித்து ஆலோசித்தல்" என்ற விஷயம் யோசனைக் கெடுத்துக் கொள்ளப் பெற்று சங்கத்தின் நிர்வாகம் தீவிரமாய் நடைபெறுவதற்கு சங்கம் தலைவர், உபதலைவர், காரியதரிசிகள், பத்திராதிபர் முதலிய தலைவர்கள் கூடிய சீக்கிரம் நம்மவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்து நம்மவர் பால் கிளர்ச்சியையும், உணர்ச்சியையும் உண்டாக்கும்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. [illegible]

தலைவர்கள் பலருக்கும் பல கடிதங்கள் எழுதியும் நமது நோக்கம் நிறைவேறுவதற்கு முடியாது போய்விட்டதைக் குறித்து விசனிக்கிறோம். இனியாவது, நமது ஜாதிய முன்னேற்றத்தில் தலைவர்கள் சற்று கவனம் செலுத்தும்படி வேண்டிக்கொள்கிறோம். 12-3-27-ல் கவுன்ஸில் மீட்டிங்கின் தீர்மானப்படி பிரசாரகர்களை நியமித்து கிளைச்சபைகள் ஸ்தாபிக்கவும், அங்கத்தினர்கள் சேர்க்கவும், பழைய சந்தாப்பாக்கிகளை வசூலிக்கவும் எடுத்துக்கொண்ட முயற்சியானது கோரிய பலனைத் தரவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். காரணம் பொது ஜனங்களிடம் ஏற்பட்டுள்ள அயர்வே. பொதுஜனங்கள் பால் உணர்ச்சியை உண்டாக்கி அயர்வை அகற்றியருளும்படி மீண்டும் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

### தலைக்கட்டு வரி.

தலைக்கட்டு வரி வசூலைக் குறித்தும் அதற்காக நியமிக்கப் பெற்ற கமிட்டிகள் செய்திருக்கும் வேலைகளைக் குறித்தும் 1924-ஞு ஜூன் மீ 19உ மதுரையிலும், 1927-ஞு அக்டோபர் மீ 2உ கும்பகோணத்திலும் நடைபெற்ற ஜெனரல் மீட்டிங்கில் தங்கள் முன் சமர்ப்பிக்கப்பெற்ற ரிப்போர்ட்டில் விரிவாகச் சொல்லியிருக்கிறோம். தலைக்கட்டு வரி வசூலாகாதிருக்கும் நகரங்களில் வசூல் செய்து பொது ஜனங்களின் மனதை உற்சாகப்படுத்தியபடி தலைவர்களையும், கமிட்டி மெம்பர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

### கல்வி யபிவிருத்தி.

பற்பல விடங்களில் நம்மவர்களின் மானேஜ்மெண்டில் ஹைஸ்கூல்களும், பிரதமப் பாடசாலைகளும் இருந்தபோதிலும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படாத கிராமங்கள் இன்னும் ஏராளமாயிருக்கின்றன. சென்ற ஸென்ஸஸ் படி நாடார்களில் எழுதப் படிக்கத் தெரியாத ஆடவர்கள் 100-க்கு 80 பேர் இருக்கிறார்கள். இந்நிலைமையில் நாம் முன்னேறிச்செல்வது எங்ஙனம்? நமது குல முன்னேற்றத்திற்கு கல்வியே முக்கிய சாதனமென்பதை அபிமானிகளனைவரும் அறிவர். 5-வயது முதல் 15-வயதுவரையுள்ள நம் குலச் சிறுவர்களை கட்டாயம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கான்பரன்ஸ்களில் செய்த தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவராத கிராமங்களிலுள்ள தலைவர்கள் பிரயாசை யெடுத்து இத்தீர்மானத்தை நிலைநாட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பள்ளிக்கூடங்கள் வைத்து பராமரிக்க எதுவில்லாத கிராமங்களிலுள்ள பிரதமப் பாடசாலைகளுக்குச் சென்ற வருஷம் செய்ததுபோல் இவ்வருஷத்திலும் சங்கத்திலிருந்து பணவுதவி செய்யப்பட்டது. இவ்வருஷத்தில் பணவுதவி பெற்ற பிரதம பாடசாலைகளின் எண்ணம் 7. ஸ்கூல் கிராண்ட்டுக்காக சாங்கிஷன் செய்யப்பட்டது ரூ 468-0-0.

இவ்வருஷத்தில் பி. ஏ. கிளாஸில் வாசிக்கும் 3-மாணவர்களுக்கும், இன்டர்மீடியேட் கிளாஸில் வாசிக்கும் 4-மாணவர்களுக்கும், அப்பர் ஸெக்கண்டரி பாரங்களில் வாசிக்கும் 2-மாணவர்களுக்கும், லோயர் ஸெக்கண்டரி பாரத்தில் வாசிக்கும் ஒரு மாணவிக்கும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டன. ஸ்காலர் ஷிப்புக்காக சாங்கிஷன் செய்யப் பட்டது ரூ 93-0-0

ஒவ்வொருவருஷமும் ஏராளமான ஸ்காலர்ஷிப் அப்ளிகேஷன்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எல்லா மாணவர் மாணவிகளுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்போதுமான பண்டில்லை. தலைக்கட்டுவரி கொடுக்காதிருக்கும் நகரவாசிகளும், கிராமவாசிகளும் தாராளமனதுடன் தலைக்கட்டு வரி கொடுப்பார்களாகில் ஏராளமான ஏழைமாணவர் மாணவிகளுக்குப்பேருபகாரமாயிருக்கும்.

### பிரசாரம்.

கவுன்ஸில் மீட்டிங்குகளின் தீர்மானப்படி பிரசாரகர்களைக் கொண்டு நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கோரிய பலனைத் தரவில்லை என்பதை மேலே எடுத்துக்காட்டியுள்ளோம். தலைவர்களின் வருகையை எதிர்நோக்கிப் பிரசாரம் விரிவாக இவ்வருஷத்தில் நடத்தப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### கிளைக் கான்பரன்ஸ்கள்.

இவ்வருஷத்தில் கிளைக் கான்பரன்ஸ்கள் நடைபெறவில்லை. ஆங்காங்குள்ள நம்மவர்கள் பால் சங்கத்தின் நன்னோக்கங்களை எடுத்துச்சொல்லி முன்னேற்றுவிப்பதற்கு கிளைக்கான்பரன்ஸ்கள் சிறந்த சாதனங்களாகும். தாலுகா, ஜில்லா, கான்பரன்ஸ்களைக் கூட்டிவைக்கும்படி அபிமானிகளைக் கேட்டுக் கொள்கிறோம். இக்காரியங்களை எளிதில் நிறைவேற்றிவைப்பதற்குக் கிளைச்சபைகள் அத்தியாவசியமென்பதை ஞாபகமூட்டுகிறோம்.

### வாலிபர் மஹாநாடு.

நமது மஹாஜன சங்கத்தின் சட்டங்களுக்குட்பட்டு சங்கத்தின் நோக்கத்தைப் பரவச்செய்வதற்காக வாலிபர்களிடையே உணர்ச்சியை உண்டாக்கும் நோக்கத்துடன் நாடார் வாலிபர் மஹாநாடு ஒன்றை கும்பகோணத்தில் நடத்தத் தாங்கள் எண்ணங் கொண்டுள்ளதாகவும், அதற்கு அனுமதி கொடுக்கும்படியும் ஸ்ரீமான்கள் கும்பகோணம் வாலிபநாடார் சங்கம் காரியதரிசிகளிடமிருந்து கடிதம் வந்தது. அம்மஹாநாட்டை நடத்தி சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளும்படி 25-9-27-ல் லெட்டர் மூலம் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பெற்றது. அம்மகாநாடு 2-10-27-ல் "நாடார்குல மித்திரன்" அதிபர் ஸ்ரீமான் ரு. ஆ. முத்துநாடார் அவர்கள் தலைமையின் கீழ் மிகவும் விமரிசையாக நடைபெற்று முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றிற்று. அன்று நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க வாலிபர்கள் ஆங்காங்கு சங்கம் ஏற்படுத்தி அவைகளை மஹாஜன சங்கத்தின் கிளைச் சபைகளாக இணைத்து சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பார்களென்று நம்புகிறோம். தேச சரித்திரங்களில் தேச முற்போக்கிற்கு வாலிபர்களே முன்னணியில் நின்று போராடியதாக நாம் காண்கின்றோம். அத்தகைய பெருமை வாய்ந்த நமது வாலிப சிங்கங்களும், தங்கள் சமூக முன்னேற்ற வேலையில் முன்னணியில் நிற்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### ஸர்க்குலர்.

இவ்வருஷத்தில் இரண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 1. நமது சங்கத்தின் நோக்கங்களை நம்மவர்கள் பாலும் ஏனைய சகோதரர்கள் மத்தியிலும், எளிதிற்பரப்புவதற்கனுகூலமாகவும், நமது சமூகத்தில் புதிய ஊக்கத்தை உண்டாக்கி சங்கத்தின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும் பொருட்டும், நாடார் மஹாஜன சங்கவாரத்தைச் சிறப்பாய் நடத்திவைக்கும்படி அபிமானிகளை அன்புடன் கேட்டுக்கொண்டது. 2. தற்கால உலகப் போக்கிற் கிணங்கவும், சமூக சீர்திருத்தத்தை யனுசரித்தும் சுகாதார விருத்தியைக் கைக்கொண்டும் 1925-ஞு ஜூன் மீ 9உ மதுரையில் கூடிய நமது 10-வது கான்பரன்ஸில் நம்மால் 5.வது தீர்மானமாக:—"நம் நாடார் மகாஜனங்களால் நடத்தப்படும் பொங்கல் உற்சவங்களில் ஜீவ பலியிடுவதை நிறுத்த [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



மானிக்கிறது" என்று ஏகோபித்து நிறைவேறிய தீர்மானத்தை 1927-ஆ ஏப்பிரல் மீ 4உ நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் அமுலுக்குக் கொண்டுவருமாறு காரியதரிசிகளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு நமது சமூகத்தவர்களால் ஆங்காங்கு பங்குனி, சித்திரை வைகாசி மாதங்களில் கொண்டாடப்படும் பொங்கல் உற்சவங்களில் தெய்வ சன்னிதானங்களில் ஜீவபலியிடுவதை அறவே அகற்றிவிடும்படி கேட்டுக்கொண்டது: இவ்விரண்டு அறிக்கைகளிலிருந்தும் சிறிது பலன் கிடைத்திருப்பதைக் குறித்து சந்தோஷமடைகிறோம்.

## கான்பரன்ஸ்.

12—3—27— கவுன்ஸில் மீட்டிங்கில் 11—வது கான்பரன்ஸை பல முக்கியஸ்தர்களைக் கலந்து நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யக் காரியதரிசிகளுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு திருநெல்வேலி, முக்கூடல், கும்பகோணம், திண்டுக்கல், அருப்புக்கோட்டை, திருமங்கலம், சென்னை இவ்விடங்களிலுள்ள நமது குலப் பிரமுகர்கள் பலருக்கும் பல கடிதங்கள் எழுதிக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதில் கும்பகோணம் நாடார் கனவான்கள் தவிர ஏனைய கனவான்களிடமிருந்து கான்பரன்ஸ் நடத்த அச்சமயம் வசதியில்லாதிருப்பதைக்குறித்து அவர்கள் வருந்துவதாகப் பதில் கிடைத்தது. கும்பகோணம் நாடார் கனவான்கள் லெட்டரில் உற்சாகம் காணப்பட்டதால் 25—6—27— கவுன்ஸில் மீட்டிங்கில் கான்பரன்ஸை ஆகஸ்ட் மாதத்தில் கும்பகோணத்தில் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் யம். யல். ஸி. அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக்கமிட்டியின் திறமையாலும் அந்நகர அபிமானிகளின் பேராதரவாலும் 1927-ஆ அக்டோபர் மீ 1, 2, 3உ களில் 11-வது கான்பரன்ஸ் சிறப்பாக கும்பகோணத்தில் நடைபெற்றது. உபசரணைக் கமிட்டியார்கள் இனி கான்பரன்ஸ் நடத்துபவர்களுக்கு முன் மாதிரியாக ஒரு மாத காலத்திற்குள் சீக்கிரமாக நடவடிக்கைகள் கொண்ட புஸ்தகமும் வரவுசெலவு கணக்கும் அனுப்பிவைத்தார்கள். 16-1-28உ கவுன்ஸில் அதனை வந்தனத்துடன் ஏற்று ஒப்புக்கொண்டது. ஆனால் ரிப்போர்ட் புஸ்தகத்தின் 12-வது பக்கத்தில் சிவகாசி நாடார் கனவான்களைக் குறித்தும், 37-வது பக்கத்தில் கும்பகோணம், ஸ்ரீமான் வீ. சந்திவீரநாடார் அவர்களைக் குறித்தும் அவரது சகாக்களைப்பற்றியும் எழுதியுள்ள விஷயங்களை நீக்கி ஒப்புக்கொண்டது.

இனி கான்பரன்ஸ் நடத்துவோரும் கும்பகோணம் உபசரணைக் கமிட்டியார் அவர்களைப் பின்பற்றி ரிப்போர்ட்டையும் வரவு செலவு கணக்கையும் சீக்கிரமாக முடித்தனுப்பும்படி கேட்டுக்கொள்வதுடன் வழிகாட்டிய கும்பகோணம் உபசரணைக் கமிட்டியார்களுக்கு வந்தனம் செலுத்துகிறோம்.

11-வதுகான்பரன்ஸ் டிக்கட்விற்பனை நன்கொடை மூலம் வசூல் ரூ 5045-0-0; செலவு ரூ 4695-1-9; மீத ரூ 394-14-3ம் உபசரணைக் கமிட்டியாரிடமிருந்து வரப்பெற்றோம்.

## ஹிந்து, சுதேசமித்திரன்.

3-10-27-ல் கும்பகோணத்தில் நடைபெற்ற நமது 11-வது வருஷாந்தர ஜெனரல் மீட்டிங்கில் 5—வது தீர்மானமாக:—

5. எ. "நமது குலத்தவர் பால் மற்றையோர் பகைமைகொள்ளும் முறையில் ஹிந்து பேப்பருக்கு விரும்பம் எழுதிய ஸ்ரீமான் திவான் பஹதூர் ஆர். ராமச்சந்திரராவ் சி. ஐ. ஈ. அவர்கள் பேரிலும், அதனை பிரசுரம் செய்த "ஹிந்து" "சுதேச மித்திரன்" பத்திரிகைகளின் நிர்வாகஸ்தர்கள் பேரிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இக்கூட்டம் சங்கம் காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது;

பி. இரண்டு பத்திரிகைகளையும் நம் குலத்தவர்கள் உடனே பஹிஷ்கரிக்க வேண்டுமாய் தீர்மானிக்கிறது;

ஸி. மேற்கண்ட தீர்மானங்களைப்பற்றி சங்கத்திலிருந்து நடவடிக்கைகள்செய்ய வேண்டிய தென்று தீர்மானித்திருப்பதால் நம்மவர்கள் பொறுமையாயிருந்து பத்திரிகைகளுக்கு மறுப்புகள் எழுதாதிருக்கும்படி தீர்மானிப்பதுடன் இவ் விஷயத்தை நம்மவர்களுக்கு சர்க்குலர் மூலம் தெரியப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கிறது"

என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அனுசரித்து நடந்த விபரங்களை சுருக்கமாகச் சொல்லுகிறோம்.

மேற்கண்ட தீர்மானங்கள் நமது "நாடார் குல மித்திரன்" பத்திரிகையிலும், தேசிய தமிழ் தினசரி பத்திரிகைகளிலும் வெளிவந்து நம்மவர்களறியுமாறு வெளிவந்துவிட்டபடியால், மேற்கண்ட கனம் திருபர் அவர்களுக்கும், கனம் பத்திராதிபர்கள் அவர்களுக்கும் விஷயங்களை அறிவித்து அவர்கள் பதில் தெரிந்து அதன்பின் அது விஷயங்களை சர்க்குலர்மூலம்நமது சமூகத்தவர்களுக்கு அறிவிப்பது நலமெனத் தோன்றியமையைக் கொண்டு 10—11—27— 18—255, 13—256 நிர். லெட்டர்கள் மூலம் முறையே கனம பத்திராதிபர்கள் இருவருக்கும் விஷயங்கள் அறிவிக்கப்பட்டதுடன் 14—11—27— 18—373 நிர். லெட்டர் மூலம் கனம் திருபர் அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

அதற்கு கனம் பத்திராசிரியர்களிடமிருந்து தாங்கள் திவான்பஹதூர் ஆர். ராமச்சந்திர ராவின் கட்டுரையால் நமது சமூகத்தினருக்கு உண்டாக்கியிருக்கும் வருத்தத்தை சங்கம் காரியதரிசிகள் மூலம் அறிந்து விசனிப்பதாகவும் நமது சமூகத்தினர்களிடம் அவர்களுக்கு விசேஷ மதிப்பு உண்டு என்றும், நம்மவர்களை வருத்தும்படி செய்ய அவர்கள் எந்நாளும் விரும்பியதில்லை என்றும், நம்மவர்களுக்கு வருத்தத்தைத் தரத்தக்க கட்டுரை தங்கள் பத்திரிகையில் வெளிவந்துவிட்டதற்கு வருந்துவதாகவும் தாம் எழுதிய கட்டுரையைக் கொண்டு நாடார்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணிவிட்டதற்காகத் தாம் வருந்துவதாக திவான்பஹதூர் ஆர். ராமச்சந்திர ராவ் பத்திரிகைகளில் எழுதியிருப்பதாகவும் "ஹிந்து" 14—10—27— லெட்டர், 18—10—27— பத்திரிகை, "சுதேசமித்திரன்" 22-10-26- லெட்டர், 22—10—27— பத்திரிகை இவைகளின் மூலம் சமாதான பதில் கிடைத்தது.

அநேகமாக கனம் திவான்பஹதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்கள் "கவர்ண்மெண்டின் நீதியற்ற முறையை கண்டிக்கும் நோக்கம் கொண்டு தான் எழுதிய கட்டுரையில் நாடார்களைப்பற்றி சில வாக்கியங்கள் எழுதப்பட்டுவிட்டதைக் குறித்து தான் வருந்துவதாகவும் உண்மையில் நாடார் சமூகத்தவர் பால் தனக்கு எத்தகைய துவேஷமில்லை என்றும் விசேஷ மதிப்பு உண்டென்றும் தமது வருத்தத்தை நமது சமூகத்தவர்களுக்கு தெரிவிக்கும்படியும் 16—10—27— லெட்டர் மூலம் தெரிவித்துக்கொண்டார்.

மேற்கண்ட விஷயங்களனைத்தையும் 16—1—28உ கவுன்ஸில் மீட்டிங்கின் கவனத்திற்கு அனுப்பினோம். அதனை கவுன்ஸில் பரிசீலனை செய்து 6-வது தீர்மானமாக பின் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

தீர்மானம்:—திவான்பஹதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்கள் "ஹிந்து" பத்திரிகையில் நமது சமூகத்தைப்பற்றி எழுதியகட்டுரையைக்குறித்து"ஹிந்து" "சுதேச மித்திரன்" ஆசிரியர்களிடமிருந்தும், ஸ்ரீமான் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்களிடமிருந்தும் வந்திருக்கும் சமாதான லெட்டர்களை வாசித்து ஒப்புக்கொண்டு ரிக்கார்டு செய்து கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

இனி இவ்வித கட்டுரைகளை தங்கள் பத்திரிகைகளில் பிரசுரம் செய்ய கனம் பத்திராதிபர்களும், மற்றையபத்திரிகைகளின் கனம் ஆசிரியர்களும் உடன்படமாட்டார்களென்று மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

## கமிட்டிகள்.

1927—ஆ பிப்பிரவரி மீ 12உ கூடிய ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கின் தீர்மானப்படி ஸ்காலர்ஷிப் நிதிக்கு மதுரை டவுனில் கட்டடம் வாங்குவதற்காக 11—3—27—கவுன்ஸிலில் 6 கனவான்களடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கப்பெற்றது. அக்கமிட்டியார் செய்த ரிப்போர்ட்டில் மெம்பர்கள் அபிப்பிராயம் வெவ்வேறு மாதிரியாயிருந்ததைக் கொண்டு 30—4—27—கவுன்ஸில் மீண்டும் ஒரு ரிப்போர்ட்டு தயார் செய்தனுப்பும்படி அக்கமிட்டிக்கு அறிவித்தது. அதன்பின் அக்கமிட்டியிடமிருந்து ஒருவித தகவலும் கிடைக்காததாலும், ஞாபக மூட்டி எழுதிய கடிதங்களுக்கு பதில் கிடைக்காததாலும் 31—3—27— கவுன்ஸில் மேற்கண்ட கமிட்டியை கலைத்துவிட்டு ஸ்ரீமான்கள் மா. வெ. பழனிச்சாமிநாடார், ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார், எம். எல். ஸி. இவர்களை ஒரு கமிட்டியாக நியமித்து இவர்களுக்கு சொத்துவாங்குவதற்கு பூரண சுதந்திரம் கொடுத்து இக்கமிட்டியிடமிருந்து எவ்வித தகவலும் கிடைக்காததோடு ஞாபக மூட்டி எழுதிய கடிதங்களுக்கும் பதில் கிடைக்கவில்லை. அதின்மேல் 10—6—28-கவுன்ஸில் இக்கமிட்டியையும் கலைத்துவிட்டு இக்கிதியின் அபிவிருத்தியைக் குறித்து திட்டம் செய்யும் பொறுப்பை தங்களுக்கு கொடுத்திருக்கிறது. நன்கு தீர ஆலோசனை புரிந்து ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்நிதியை அபிவிருத்தி செய்யும் ஒரு நல்முறையை திட்டம் செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ராயல் கமிஷன் முன்பு நமது அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்வதற்காக 3—10—27- ஜெனரல் மீட்டிங்கில் நியமிக்கப்பெற்ற கமிட்டி எவ்விதவேலையும் செய்யாதிருந்ததைக் கொண்டு அக்கமிட்டி மெம்பர்களுக்கு ஞாபக மூட்டுதல்கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதற்கு அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. ஆனால் மாயவரம் ஸ்ரீமான் டி. சேவியர் நாடார் அவர்களிடமிருந்து தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்த ஒரு லெட்டரும், நாசரேத் ஸ்ரீமான் பி. எஸ். கனியப்ப நாடார் அவர்களிடமிருந்து ராஜிநாமா கடிதமும் கிடைத்தன. அவற்றை கவுன்ஸில் கவனத்திற்கனுப்பினோம். 10—6—28—ல் கூடிய கவுன்ஸில் காரியதரிசிகளே காரியத்தை செய்து முடிக்கும்படி கட்டளையிட்டது. அதின்படி காரியதரிசிகளால் தயாரிக்கப்பெற்ற யாதாஸ்து பரிசீலனை செய்து அரசியல் கமிஷனுக்கு அனுப்பப் பெற்றிருக்கிறது.

## வரவு செலவு.

இந்த வருஷத்தில் அடியிற்கண்ட வரவு செலவுகள் நடந்திருக்கின்றன:—

### வரவு 1927–28–ஆ

ஸ்பெஷல் அங்கத்தினர் சந்தா 113-0-0 ஆர்டினரி அங்கத்தினர் சந்தா 197-0-0 கிளைச்சபை ரிஜிஸ்டர் சந்தா 27-0-0 நன்கொடை 10-10-0ரூல் புஸ்தகம் விற்று வரவு 4-1-0 சில்லரை வரும்படி 36-14-7 புரோவிஷனல் சர்டிபிக்கேட் விற்று வரவு 82-0-0 ஸ்காலர்ஷிப் நிதி பற்று நீக்கி வரவு 1599-2-0 ஸ்காலர்ஷிப் பண்டு 41796-6-1 கான்பரன்ஸ் ஆதாயம் 353-3-11 ஆக வரவு ரூ 44219-5-7.

### செலவு. 1927–28ஆ

வாடகை 299-11-4 தபால் தந்தி 179-8-6 ஆபீஸ் சப்ளை 65-12–7 கவுன்ஸில் மீட்டிங்கு 52-3-1 பிரயாணம் 173-7–0 வாசகசாலை 122-13-0 ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கு 160-7-0 சொத்து 159-12-0 இனும் 43-0-0 பிரசாரம் 478-9-8 ஆபீஸ் சிப்பந்திகளின் சம்பளம் 955-9-6 ஸ்காலர்ஷிப் 914-0-0 சில்லரைச் செலவு 116–8–7 பாரம் அண்டு, ரிப்போர்ட்டு 102–3–0 ஆக ரூ... 3823—9—3, சேவிங்ஸ்பாங்கு இருப்பு ரூ 2785—14—2, இந்தியன் பாங்கு இருப்பு ரூ 38000—0—0, கையிருப்பு ரூ 109—14—2 ஆக 44219—5—7.

## முடிவுரை.

இவ்வருஷத்தில் சங்கம் செய்துள்ள வேலைகளையும் வரவு செலவு கணக்குகளையும் உங்கள் முன்னிலையில் தெரிவித்துக் கொண்டோம். இவ்வருஷ வரவு செலவு கணக்கில் 1924–25 முதல் 1927-28ஆ முடிய வசக்கட்டு கணக்கில் வசூல் செய்ய முடியாத நிலைமையிலிருந்த ரூபாய்களை 16-1-28– கவுன்ஸிலின் கட்டளைப்படி செலவு எழுதப்பட்டிருக்கிறது.

## கள்ளிக்குளம் பால்ய நாடார் சங்கம், கொழும்பு.

இச்சங்கத்தின் 6—வது வருட 4—வது வருஷாந்தக் கூட்டம் 8—7—28-ல் இரவு 9-30 மணிக்கு உலுப்பெட்டி அவிஸ்டன் பிளேஸ் 28 நிர் தோட்டம் 9-ம் நிர் கட்டடத்தில் சங்கப் பிரஸிடெண்டாகிய ஸ்ரீமான் பு. வி. ஏசுவடிய நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறியது. ஏராளமான ஜனங்கள் விஜயஞ் செய்திருந்தனர். ஸ்ரீமான் வியாகு. மி. மரியஏசுவடிய நாடார் அவர்களால் தெய்வவணக்கம்பாடப்பட்டதும், "மெய்வருந்தக்கூலிதரும்" என்னும் உபந்நியாசத்தை எடுத்துக் கொண்ட ஸ்ரீமான் ஞா. ஏ. தேவசகாய நாடார் கூட்டத்திற்கு விஜயஞ் செய்யாதலால், அக்கிராசனர் நியமனத்தால் ஸ்ரீமான் வி. ச. அந்தோணி சவரிமுத்துநாடார் அவர்கள் அவ்வுபந்நியாசம் செய்தார்கள். அதன்பின் பிரஸிடெண்டாகிய ஸ்ரீமான் பு. வி. ஏசுவடியநாடார் அவர்களும், உபகாரியதரிசி ஸ்ரீமான் வி. மி. ஜெயநாதநாடார் அவர்களும் தம் ஜன்ன தேசமாகிய இந்தியாவுக்குப் போகிறபடியால் அவர்களுக்குப் பதிலாக முறையே ஸ்ரீமான்களான அ. ச. மதுரேந்திரநாடாரவர்களைப் பிரஸிடெண்டாகவும், அ. ப. மரியவிசுவாசநாடாரவர்களை உபகாரியதரிசியாகவும் நியமித்தனர். பின்பு ஸ்ரீமான்களான பிரஸிடெண்ட் பு. வி. ஏசுவடியநாடார் அவர்கள், சென்ற வருடக் கௌரவ காரியதரிசி வி. ச. அந்தோணி சவரிமுத்துநாடார் அவர்கள், சென்ற வருடக் கௌரவ பொக்கிஷதார் வியாகு. மி. மரியஏசுவடியநாடார் அவர்கள் ஆகியவர்கள் சங்கத்திற்குப் செய்து வந்த நல்லுழைப்பிற்கு நன்றியறிதலாக புஷ்பஹாரம் சூட்டப்பட்டனர். அதன்பின்பு கௌரவ காரியதரிசி அவர்களால் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு, ஸ்ரீமான் அ. ப. மரியவிசுவாச நாடார் அவர்களால் ராஜ வாழ்த்துப் பாடப்பட்டதும் கூட்டம் இனிது கலைந்தது என்று கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் புளி. ம. ம. ஷத்திரநாடார் எழுதுகிறார்.

## பால்ய நாடார் சங்கம், கோப்பிநாயக்கன் பட்டி.

இச் சங்கத்தின் பொதுக்கூட்டம் 6-7–28 மாலை 7-மணிக்கு காட்டாண்மை ஸ்ரீமான் சுப்பையாநாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தார்கள். கடவுள் வணக்கம் முடிவுற்றதும் "நமது கடமை" என்பது பற்றி ஸ்ரீமான் பால்ராஜ் ஜேம்ஜ் நாடார் அவர்கள் நன்கு பேசினார். பின்னர் அது குறித்து சிலர் பேசி முடித்ததும் தலைவர் முடிவுரை கூறினார். தலைவர் முடிவுரைகூறியதும் முக்கியஸ்தர்களுக்கு மாலைகள் சூட்டப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

எஸ். ரத்தினசாமிநாடார்,
காரியதரிசி.

---

## கனவான்களே!

நமது ஜாதியின் நலனைக் குறித்து நாங்கள் கூறியுள்ளவைகளை அங்கீகரித்து நிறைவேற்றி வைக்கும்படி தாழ்மையுடன் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்,
ப. வ. சோமசுந்தர நாடார்,
காரியதரிசிகள்.